# பல்கீஸ் நாச்சியார் காவியம்

கவிமாமணி
கவி கா.மு.ஷெரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்

# பல்கீஸ் நாச்சியார் காவியம்

கவிமாமணி
கவி கா.மு. ஷெரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்
21 பச்சையப்பச் செட்டி தெரு,
சென்னை - 2

உரிமை பதிவு

முதற் பதிப்பு : டிசம்பர் 1991

பக்கங்கள் : 8 + 64 = 72

அளவு : 22 *cm* X 14 *cm*

*Paper used : 14 kg White Creamwove*

விலை : ரூ. 10-00

அச்சிட்டோர் :

**மில்லத் பிரிண்டர்ஸ்**
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-600001

# பாராட்டுரை

உலகெலாம் எழுந்துள்ள எல்லா மொழி இலக்கியங் களிலும் காவியம் உயர்ந்த சிறப்புடையது, என்றும் நின்று நிலவுந் தகையது. கற்பவர் இதயங்களைக் கவரும் தன்மை யது. தமிழ் இலக்கிய உலகில் காவிய காலம் என்றே ஒரு கால கட்டத்தை வரலாற்றாசிரியர் வரையறுத்து வைத் துள்ளனர்.

இளங்கோவைப்போல், திருத்தக்க தேவரைப் போல், கம்பரைப்போல் காவியப் புலவர் தமிழ் மொழிக்கு என்றும் சிறப்புச் செய்து கொண்டிருப்பர். அவர்கள் இறவாப் புகழுடையர். அவர்வழி வந்த புலவர்கள், கவிஞர்கள் பலர். உமறுப்புலவர் ஓர் உயர்புலவர், வீரமாமுனிவர் செந்தமிழ்ச் சிந்தனை சிதறாப் புலவர்.

இது-இருபதாம் நூற்றாண்டு - காவிய காலமன்று. இருப்பினும் முன்னர்த் தோன்றிய இஸ்லாமியக் காப்பியங் களைப் பதிப்பிக்கின்ற காலம், பாராட்டுகின்ற காலம். இக்காலத்தில் காவியம் படைக்க வேண்டுமென்னும் வேட்கை ஒரு கவிஞர்க்குப் பிறப்பதே சிறப்புக்குரியது. அவர் அதற்குச் செயலாக்கம் கொடுப்பது போற்றுதற் குரியது. அத்தகு சிறப்புக்குரிய-போற்றுதற்குரிய-நற்றமிழ்ப் பணியினை நம் கலைமாமணி கவி கா. மு. ஷெரீப் அவர் கள் செய்துள்ளார்கள்.

''பிறை'' என்னும் இதழில் வெளிவந்த கவிதைகளில் காவியத்தை மூன்று அங்கங்களாக முடிக்க முனைந்திருக் கின்றார் கவிஞர். ஆயின், உங்கள் கரங்களில் தவழ்வது

முதல் அங்கம்தான். பிற இரண்டு அங்கங்கள் பின்னர் வரும். பிறை, வளர்பிறையாக முழுநிலவாக முகிழ்த்திடும்!

ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பார்கள். முதற்பாகத்தில், முந்நூற்றிரண்டு முத்தான பாடல்கள் உள்ளன. விருத்தமெனும் ஒண்பாவில் தம் முத்தமிழ் வித்தகத்தையெல்லாம் கவி கா. மு. ஷெரீப் விரித்து வைத்துள்ளார். ஓசை நயத்துக்கென, உவமைச் சிறப்புக்கென, சொல்லோட்டத்துக்கென, சுவைப்பாங்குக்கென ......பல முறை படிக்கத்தக்க பாடல்கள்.

காவியம், நாட்டு வருணனையோடு தொடங்குகின்றது.

''உலகிதன் நெஞ்ச மென்றே உரைப்பதுண்
......... ......... .........டரபி யாவை
......... ......... .........''

கம்பரைப்போல், சேக்கிழாரைப்போல் கவி, காவியத்தைத் தொடங்குகின்றார், உலகமெனும் சொல்லாலே! அது மங்கலச் சொல் என்பர்.

எழுபத்தெட்டாண்டுகளை எட்டிவிட்ட நம் கவிக் கிழவர் இன்பச்சுவையை இன்றும் எத்துணை நயத்தோடு பாடுகின்றார்: தலைவி பூப்பெய்திவிட்டாள். பண்பார்ந்த பாட்டு வருணனையைப் பாருங்கள்.

''கரும்பிலே இனிப்புப் போல கனிகளில் சுவையைப் போல
அரும்பிலே மலர்ச்சி போல அதனிடை மணத்தைப்போல
வரும்புது வசந்த கால மலர்ச்சியின் பொலிவைப் போல
பெரும்புகழ் உமையிரத் தென்பார் பெண்பெறும் பருவம் பெற்றாள்''

ஓசை நயத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

''மானும் மயிலும் மகிழ்ந்தாட
மஞ்சம் மீது கிளிபாட
தானும் தனது தோழியரும்
தங்கிப் பூங்கா மாளிகையில்

தேனும் பாலும் கலந்துண்டு
திளைக்கப் புனலில் தினமாடி
கானகத்தில் போயமர்ந்து
கதைகள் பேசி வருவாரே.''

அழகும் ஓர் அழகு பெறுகின்றது :

''அன்னம் நாணும் நடையுடையாள்
அமுதம் நாணும் முகமுடையாள்
துன்னும் சுடர்கள் அத்தனையும்
தோற்றும் தமது கண்கொண்டு
என்ன நினைத்தோ எனைப்பார்த்தாள்
எதையோ கருதி ஏகிவிட்டாள்
அன்னாள் வசமாய் ஆகிவிட்டேன்
அவளை நினைத்துத் தவிக்கின்றேன்''

உவமை, காவியக் கவிஞர் கையாளும் கைவந்த கவின் கலை. நம் கலைமாமணி பசியையும் துய்த்திருப்பார் என்று தோன்றுகின்றது! ஓர் உவமையை உற்று நோக்குங்கள் :

''பசித்தோன் உண்ணும் உணவுதனைப்
பறித்தல் போன்ற அவ்வுரை...''

''குன்றுபோல் அன்னம் குவித்திருக்கென்னெதிரில் உண்ண முடியாதே...'' என்று பாவேந்தர் பாடினார். அதன் சாயலும் சார்பும் மேற்காணும் அடிகளில் காணலாம்.

காவிய அழகு - கவிதையழகு ஒழுகுகின்ற ஒரு வரி- உயர்வரி!

''திரண்டெழுந்த புண்ணியத்தின் உருவம் ஈதோ
சித்திரத்தில் உயிர்புகுத்தி விட்டார் தாமோ?

இன்னோரிடத்தில் இனியதோர் உவமை :

''குன்ற முகிலினைக் கண்ட மயிலெனக்
குதூகலித்தனள்...''

இலக்கியச் சுவைகளை எடுத்துக்காட்டிக் கொண்டே செல்லலாம். அவற்றைப் படிப்பவர்களே துய்த்து மகிழலாம்!

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு மேல் அருந்தமிழுக்குத் தொண்டாற்றி வரும் அன்னாரின் வாழ்க்கை நலமுடையதாக அமைய வேண்டும் என்பது என் ஆசை. ஆண்டவன் அருள் புரிக!

அன்பன்,
**சா. அமீது**

உறுப்பினர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர்
தேர்வாணையம், அரசினர் தோட்டம்,
சென்னை-600 002
24-12-1991

# நுகரு முன்...

இது ஒரு முற்றுறாக் காவியம்.

இக்காவியத்தை முழுமையாக்கிடின் மூன்றங்கங்களைத் கொண்டு திகழும். இதில் உளது முதலங்கம். இதற்கடுத்ததாக அமைவது சுறாயிக் மன்னனை மணந்து, அவன் தன்னைத் தொடா முன்னரே அவனைக் கொன்று அவனுடைய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, சீருற்ற ஆட்சியாக மக்கள் பாராட்டினைப் பெற்று ஆண்டுத் திகழ்ந்திருந்த அங்கமாகும். அதன்பின்னர் சுலையுமான் நபியை (இவரை விவிலியம் சாலமன் எனக் குறிக்கும்) மணந்து பதின்மூன்றாண்டுகள் அவர்களின் நன்மனைவியாக வாழ்ந்து, ஓர் ஆண்மகவையீன்று மரணித்த அங்கம் கண்டு முடிவுற்றிடும்.

இந்த முப்பெரும் அங்கங்களையும் கவிதைகளாக்கிடும் எண்ணத்தில் ''பிறை'' எனும் திங்கள் ஏட்டில் 1977 ஜனவரி யில் ஆரம்பித்தேன். முற்றுற்றிடா நிலையில் எனது தொடர் நின்றது. பின்னர் 'பிறை' வெளிவருவதும் நின்று பட்டது. ஒரு ஏட்டில் தொடராக வெளிவந்ததை மற்றோர் ஏட்டில் தொடர்ந்தால் புதுவாசகருக்கு முற்பகுதி தெரியாததால் படித் திடத்தோன்றாது. எனவே வேறு ஏடுகளை அணுகிடவில்லை. சீறாப்புராணத்திற்கு உரை எழுதிடும் கடினமான பணியில் ஈடுபட்டிடவேண்டிய திருந்ததால், தனியாக இதன் பிற் பகுதியை எழுதிட முடியவில்லை. பலர் நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் இக்காப்பியத்தை முழுவதுமாக எழுதி முடித்திடு மாறு வற்புறுத்தினார்கள். அவர்களின் அளவு கடந்த கவிதைச் சுவைப்பார்வத்தை என்னால் உணர முடிந்தது. ஆயினும் நிறைவேற்றிட இயலவில்லை. தம்பி ஆலிஜனாப் எம். சையது முகம்மது ''ஹஸன்'' அவர்கள், ''வெளிவந்துள்ள வரையிலான கவிதைகளையேனும் நூலாக்கிடலாமே!'' என உரைத்தார்கள். அவர்களின் விருப்பு எனக்கும் விருப்பாயிருந்ததால் இந்தக் குறைக்காப்பியம் உங்கள் கையில் திகழ்கின்றது. இறையருளால் நான் உடல் நலம் பெற்றால் சீறா உரை எழுதும் பணி நிறை வுற்றதும் இக்காவியத்தை முற்றுமாக எழுதி முழுமையாக்கி வெளியிட்டிட எண்ணம். முடிவில் கிட்டிடும் பயன், தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதிச் செயற்பட்டால், அதற்கு ஆண்ட வன் தந்திடும் கூலி, மிக உயர்ந்ததாக இருந்திடும். ஆம் பல்கீஸ் நாச்சியாரின் சிந்தித்திடவும் இயலா வீரச் செயலுக்கு, பெண் களின் கற்பைக் கவர்ந்து களங்கப் படுத்திய சுறாயிக் மன்னனைக் கொன்றொழித்ததற்கு இறைவன் அளித்த பரிசு,

அறிவாளராகவும் மிகப் பெரிய பேரரசராகவும் விளங்கிய சுலையுமான் நபியவர்களைக் கணவராக்கி அளித்த நற்பேறாகும்! புகழனைத்தும் இறைவனுக்கே!

பல்கீஸ் நாச்சியார் வரலாற்றை விவிலிய அடிப்படையை மையமாக வைத்து இஸ்லாமிய ஏற்பிற்கு மாற்றமுடைய வகையில் ஆங்கிலத்தில் ''ஷிபா'' (SHEBA) எனும் பெயரில் வரலாற்றுப் புதினம் புனையப் பட்டிருந்து, அப்புதினம் ஆங்கிலத் திரைப்படமாகவும் நாற்பதாண்டுகட்கு முன்னர் வெளிவந்துளது. ஏமனில் காதுவழிக் கதையாக இவ்வரலாறு இன்றளவும் பேசப்படுகிறதென்பர். கல்வெட்டுகளிலும் உளதென்பர். அபிசீனிய அரச பரம்பரையினர் தங்களை பல்கீஸ் நாச்சியார் வழித்தோன்றல்களாக உரைத்துப் பெருமைப் படுவதாகவும் தெரிந்திட முடிகின்றது. அங்கேயும் காதுவழிச் செப்பலும் கதைகளும் கல்வெட்டும் உண்டென்பர்.

இந்த அரிய வரலாற்றினை கவிநயத்துடன் காவியமாக்கிட முற்பட்டதற்கான கதைக் கருவூலம் ''கசசுல் அன்பியா'' எனும் பெயரில் துலங்கிடும் நபிமார்களின் வரலாற்றுரை நூலையும் வண்ணக் களஞ்சியப் புலவர் யாத்தளித்துள்ள ''ராஜ நாயகம்'' எனும் சுவை நிரம்பிய தமிழ்க் காப்பியத்தையும் படித்துப் பெற்றதாகும்.

காவியம் முற்றுறாதாயினும் கற்பனை வளமும் கவிதை வளமும் நிறைந்ததாகும். கவிதைகள் பலவித யாப்புகளில் அமைக்கப்பட்டுள்ளன. சந்த விருத்தங்கள் நிறைந்து திகழ்வதைக் காணலாம். படிப்போருக்கு எளிதாக இருந்திடக் கருதி, சில சந்தப்பாடல்களுக்கு ''தத்தகாரம்'' தலைப்பில் தரப் பட்டுள்ளது. படிப்பவர்கள் கவிதைகளைப் பற்றித் தங்களின் அப்பட்டமான கருத்தைத் துல்லியமாகத் தருவார்களாயின் நன்றியுடன் ஏற்பேன்; தமிழும் வளர்ச்சியுறும்.

இச்சிறு நூலிற்கு தமது அரிய ஆய்வு முன்னுரையை வழங்கியுள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழு உறுப்பினர் பேராசிரியர் ஆலி ஜனாப் சா. அமீது எம். ஏ. அவர்கட்கும், என் பால் உள்ள அன்பால் விரைந்தச்சிட்டு உதவியுள்ள மில்லத் பிரிண்டர்ஸ் அதிபர் ஆலி ஜனாப் எ. சையது முகம்மது ''ஹஸன்'' அவர்கட்கும் எனது ஆழ்ந்த நன்றி. ஊன்றிப் படித்திடும் நுகர்வாளர்களே, நன்றி உங்களுக்கும் தான்.

அன்புடன்

**கவி கா. மு. ஷெரீப்**

# பல்கீஸ் நாச்சியார் காவியம்

## நாடு

### அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

உலகிதன் நெஞ்ச மென்றே உரைப்பதுண் டரபி யாவை
அலகிலாப் புகழுள் ளோனின் ஆதிஆ லயமுண் டங்கே
கலகமற் றுலக மக்கள் கலந்துற வாடி என்றும்
நலத்துடன் வாழச் சொன்ன நந்நபி பிறந்த நாடாம் (1)

ஆதிமா மனிதர் என்றே அகிலத் தாரொப்பு கின்ற
ஆதநந் நபியும் அங்கே அதிகநாள் வாழ்ந்த துண்டு
சீதநந் நபியிபு ராகீம் திருமகன் இஸ்மா யீலும்
பேதற அந்த நாட்டில் பிறங்கிட வாழ்ந்தி ருந்தார் (2)

வேதமோர் நான்கும் கற்ற மேதையர் வாழ்ந்த நாடாம்
சோதனை நபிமார் கட்குத் தோன்றிய துண்டு மாங்கே
மாதரின் திலத மன்னோர் வதிந்ததும் அந்த நாடே
போதகர்க் கரசர் தாஹா[1] பிறந்தபொன் நாடு மாமே (3)

உலகினர் யாவ ரும்மே ஒருதினம் ஆண்டு தோறும்
இலகுறக் கூடி ஒன்றாய் இறைவனை வணங்க வவ்வ
துலங்கிடும் வானோர் தாமும் தொழவரும் தலத்தைக் கொண்ட
நலந்திகழ் அரபு நாட்டின் நயத்தினை உரைக்கப் போமோ (4)

கனிவளம் உடைய நாடு கதிர்மணி விளையும் நாடு
மனிதரை மனித ராக்கும் மாநபி பிறந்த நாடு
புனிதமாப் போரில் வல்லோர் பொலிவுடம் பிழந்த நாடு
தனித்திறம் படைத்த நாடு ஜகம்புகழ் அரபு நாடே (5)

---

1. தாஹா நபிகள் நாயகம்

அரசியல் அறம் வளர்த்த அறிஞர்பல் லோர்க ளாண்ட
சிறப்புமிக் குடைய நாடு சிரசினைக் கொள்கைக் காக
வரையற ஈந்தோர் ரத்தம் வடிந்துமண் சிவந்த நாடு
நிறைமனத் தரும தாதா நிலைத்து வாழ்ந் திருந்தநாடு (6)

எதற்குமே சட்டம் கண்ட இஸ்லாமி யர்கள் நாடு
மதத்துடன் அரசும் ஒன்றாய் வனைந்து சேர்ந்தாளும் கொள்கை
உதித்தெழு வைத்த புர்கான்[1] உருப்பெறக் கண்ட நாடு
இதந்தரு ஜம்ஜம் கேணி[2] இலங்கிடும் அரபு நாடே (7)

ஒட்டகப் பந்த யங்கள் ஒட்டியே மகிழ்ந்த நாடு
நெட்டுயர் குதிரை யாலே நீள்புகழ் படைத்த நாடு
நட்டுயர் ஈஞ்சி[3] னாலே நல்வளம் உற்ற நாடு
தொட்டுயர் வர்த்த கத்தால் தொல்புகழ் பெற்ற நாடு (8)

பெரும்படை தன்னைச் சில்லோர் பேதறப் பொருதி வென்ற
அரும்பெரும் சரித்தி ரத்தை ஆரமாய்ப் பூண்ட நாடு
கரிதனைக் குருவி கொன்ற காரணம் படைத்த நாடு[4]
கரும்பெனப் போரை எண்ணும் காளையர் உடைய நாடு (9)

புண்ணிய மேலோர் பாதம் பொருந்திய கார ணத்தால்
மண்ணெல்லாம் மகிமை பெற்று மகிழ்ந்ததன் அடியில் தோண்ட
எண்ணெயூற் றிலங்கிப் பொன்னாய் எங்கணும் இலங்கும் நாடு
பண்ணிசை யாலே வையம் பாலிக்கும் அரபு நாடே (10)

இருபுறம் இரண்டு கண்டம் இலங்கிட நடுக்கண் டம்மாய்
திருவுறத் திகழும் நல்ல செம்மைசேர் ஆசி யாவின்
சிறப்புறும் தலையாய் நின்று ஜெகமெலாம் அறிந்தோர் தம்மை
பொறுப்புடன் தாங்கித் தாங்கி புகழ்குவித் திட்ட நாடு (11)

---

1. புர்கான்-திருக்குர்ஆன் 2. ஜம்ஜம்கேணி-புனித நீருற்று.
3. ஈஞ்சி—பேரீத்த மரம்.
4. கரிதனைக்......, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு சுமார் அறுபது நாட்களுக்கு முன்னர் அபிசீனிய அரசரின் பிரதிநிதியாகயிருந்த அப்ரஹா என்பான், யானைப் படைகளுடன் மக்காவை முற்றுகையிட முனைந்தான். அவனுடைய யானை (கரிப்) படைகளை, அல்லாஹ்வின் கட்டளையால் ஒரு பறவைக் கூட்டம் எவ்வாறு அழித்தது என்பதைத் திருமறையின் 105ம் அத்தியாயமான ''ஸூரத்துல் ஃபீல்'' கூறுகிறது.

இந்தநல் அரபு நாட்டின் எழிலுறும் நெற்றி யாக
சுந்தரப் பொலிவி னோடு தொல்புகழ் ஆரம் பூண்டு
கந்தமார் பகுதி யாகக் கமழ்ந்திடும் எமன்தே யம்மே
அந்தநற் றேயம் தன்னில் அமைந்த தாம்சபா வெனுமூர்! (12)

கோட்டைகள் கொத்த ளங்கள் குளிர்மலைச் சோலை வாவி
பாட்டைகள் பழத்தோட் டங்கள் பலப்பல சபாவில் உண்டு
வாட்டமற் றவ்வூர் மக்கள் வாழ்ந்தனர் நெடுங்கா லம்மாய்
ஆட்டமும் பாட்டும் கூத்தும் அதிகமுண் டவ்வூர் தன்னில் (13)

இன்றைக்கோ ராண்டு மூவா யிரத்தின் முன்னிந்த வூரை
நன்றுறும் நகர நாடாய் நனிபெற தனியாய் ஆக்கி
மன்றுசூழ் கொலுவ மைத்து மன்னனுய் சுறாயிக் கென்பான்
வென்றிட யாரு மின்றி வீரத்தோ டாண்டி ருந்தான் (14)

## அரசன்

இளமையோ டழகு செல்வம் ஏற்றமா பதவி வீரத்
தளபதி படைகள் நல்ல தந்திர அமைச்சர் மற்றும்
உளமகிழ்ந் திருக்கச் செய்யும் உயர்பணிப் பெண்கள் ஆண்கள்
அளிதரு வாக னங்கள் யானைதேர்க் குதிரை ஒட்டை (15)

பொன்னினால் மாளி கைகள் பூவிரி கட்டில் மெத்தை
என்னதான் செய்திட் டாலும் எதிர்த்திடா நாட்டு மக்கள்
தன்னறி வழிக்கும் தோழர் தனைப்புகழ்ந் திருக்கும் கற்றோர்
இன்னவர் சூழ ஆட்சி ஏற்றிருந் தாண்டான் சுறாயிக் (16)

எதிர்ப்பவ ரில்லை வேலை எதுவுமே யில்லை தன்னைத்
துதித்துயர் வடையும் தோழர் சொற்படி நடக்க லானான்
மதிப்புயர் அந்தத் தோழர் மன்னவன் சுறாயிக் தன்னை
பொதுப்பட தீய தெல்லாம் புரிந்திடப் பழக்க லானார் (17)

மதுவிலே ஆரம் பித்து மங்கையர் சேர்க்கை யீறாய்
நிதநிதம் தீய செய்கை நிகழ்த்தியே மகிழ்ந்தான் சுறாயிக்!
விதவிதம் அவன்தான் செய்யும் வியத்தகு தீமை தன்னில்
பதைப்பினைத் தருவ தாகும் பாவையர்க் கிழைத்த தீங்கு (18)

செல்வநற் செருக்கி னாலே சேர்ந்தமாப் பதவி யாலே
நல்விதச் செயல் மறந்த நண்பரின் உதவி யாலே
வல்லிறை தனக்கொவ் வாதான் மனிதரின் பழிப்பிற் கான
பொல்வினை இதனைச் செய்தான் புகழ்ந்தனர் அவனைத்
[தோழர் ! (19)

புகழ்ச்சியால் உணவின் ஊட்டம் புகுத்திய சதைக் கொழுப்பால்
அகத்தெழு அகந்தை யால்மேல் அதட்டிக்கேட் பாரி லாதால்
மிகப்புதுச் செயலென் றெண்ணி மேவினான் சுறாயிக் தீதில்
இகந்தனில் இவனொப் பார்வே றிவையென சரிதம் செப்ப !
(20)

அறவினை மூடச் செய்கை ஆகுமென் றுரைப்பர் நண்பர்
சரதமென் றதனை ஏற்பான் தர்மமாச் சாலை எல்லாம்
நெறிகெட மூடி வைப்பான் நேர்மையில் மாற்றம் செய்வான்
முறையல ஒழுக்கம் பேணல்; முரண்படு, என்பர் செய்வான் !
(21)

துறைதொறும் தீமை செய்து துயரிடை மக்கள் வீழ
மறையறி வுடையோர் எல்லாம் வருந்திட வைத்தான் சுறாயிக்
பறைபட அவனின் தீமை பரவின நாடு முற்றும்
சிறகொடி பறவை யென்ன செயலிழந் திருந்தார் மேலோர்! (22)

மக்களை மதியா சுறாயிக் மன்னவன் இன்னும் சற்றே
எக்களிப் புடனே மேவி இயற்றினான் சட்டம் ஒன்றை
ஒக்கவென் ஆட்சியின் கீழ் ஒருகுறை யின்றி வாழும்
தக்கவென் குடிஜ னங்காள் சாற்றுவேன் ஒன்று கேண்மின் (23)

மன்னவன் எனக்கே இந்த வையத்தின் உடைமை சொந்தம்
பொன்னோடு பூமி பெண்கள் போகபோக் கியங்கள் எல்லாம்
என்னதே இவற்றில் ஒன்றை ஏற்கநான் விருப்பங் கொண்டால்
அன்னதைத் தடுக்க யார்க்கும் அளித்திலேன் உரிமை காண்க
(24)

எனதரும் சட்டம் ஈதை ஏற்றிட மறுப்போர் சாவர்
முனமிதை அறிவீர் என்றன் முடிவிதில் மாற்றம் இல்லை
தனதரும் பொருளைப் பொன்னை தாமனு பவிக்க என்றால்
வனிதைய ரோடு நீங்கள் வாழ்ந்திட வேண்டு மென்றால் (25)

குலக்கொடி யாக நீங்கள் கோதறப் பெற்ற பெண்ணை
மலர்க்கொடி யாய்வ ளர்த்து மங்கையா யவள்பூப் பெய்தி
நலந்தொடக் குளித்த அன்றே நம்மிடத் தனுப்பல் வேண்டும்
அலர்ந்தஅப் பெண்ணை யானே அனுபவித் தின்பம் கொள்வேன் (26)

பிறகவள் தன்னை வேறோர் புருடனுக் கீதல் செய்க
அறமென யிப்ப ழக்கம் ஆகுக இன்று தொட்டே
சிறைவரும் பெண்ணைப் பெற்றால் தெரிவிக்கா திருப்ப வர்க்கே
சிறப்புள என்றன் இந்தச் செய்தியை ஏற்று வாழ்க (27)

என்றொரு சட்டம் செய்தான் இழிகுண சுறாயிக் கென்பான்
"இன்றுதான் நீயின் னாட்டின் எழிலுறு மன்னன் ஆனாய்
நன்றுனை வாழ்த்து கின்றோம் நாளுநீ வாழ்க" என்றே
ஒன்றிய நண்பர் கூற உளமகிழ் வுற்றான் சுறாயிக். (28)

தேயமா மக்கள் எல்லாம் சிந்தினர் கண்ணீர் வெள்ளம்
பேயெனும் மன்னன் செய்த பிழைபடு சட்டம் ஈதை
ஆயவோ, மறுப்ப தற்கோ அஞ்சியே அடங்கிக் கீழாம்
நாயெனக் கிடந்தார்; சுறாயிக் நாளுமோர் பெண்சு வைத்தான் (29)

உயர்பெரும் அதிகா ரத்தில் உள்ளவர் ஒருங்கு கூடி
துயர்தரு மந்தச் சட்டம் துளியும்தம் வீட்டி னுள்ளே
அயர்ந்துமே நுழையா வண்ணம் ஆவன செய்து கொண்டார்
சுயநலம் அதிகாரத்தாற் சொந்தமோ எந்த நாளும்? (30)

## அமைச்சன்

### வேறுசந்தம்

மன்னவன் செய்த சட்டம் அதனை
மாண்புறத்தன் நாட்டில்
என்றும் நிலைத்து நிற்கத் தளபதி
எடுத்தான் வாள்தனையே
பொன்றாப் புகழுள படைகள் அவன்வழி
போயின் ஆணைப்படி
நின்றான் நிலையிலாக் காமம் தன்னை
நிலையெனக் கொண்டரசன் (31)

கடமை தவறா அதிகா ரிகள்தம்
கவனம் சட்டத்திலே
மடமை நிறைந்த மக்கள் நிலையோ
மானம் இழப்பதிலே
புடவை உடுத்தும் பெண்கள் தரமோ
பேசும் வகையிலில்லை
நடன மாடிக் களித்தான் இபுலீஸ்[1]
நல்லர சேற்றங்கே (32)

மன்னன் தனிலும் அழகன் அறிஞன்
வாலிப நல்லமைச்சன்
இன்னும் திருமணம் செய்யா நிலையில்
இருந்தான் பதவியிலே
அன்னோன் குலத்தால் குணத்தால் தீமை
அணுகாப் பாங்கினனே
உன்னுவான் அரசன் நிலையும் நாடு
உற்ற தீமைபற்றி (33)

ஐம்பெருங் குழுக்கள் ஆயத் தலைவர்
அரசனை வாழ்த்துவதும்,
பைம்பொன் அணியும் பெண்கள் கண்ணீர்
பனித்துக் கலங்குவதும்,
சைனியத் தோர்கள் அரசனைக் காக்கும்
சடங்கினர் ஆனதுவும்
பைம்புனல் நாடு தீமையில் சிக்கி
பரிதவித் திடுவதையும் (34)

தன்னந் தனியே அமர்ந்தே அமைச்சன்
தனக்குள் சிந்திப்பான்
''என்ன வகையில் முயன்றால் நாட்டை
எழில்பெற வைத்திடலாம்
துன்னும் தீமை தொலைந்தே ஏகத்
துலக்குவாய் வழிஎனக்கே
மன்னும் புகழுடை இறைவா,'' என்றே
வாழ்த்தி வேண்டிடுவான் (35)

---

1. சாத்தான்

ஒன்றும் தோன்றா நிலைவரின் புரவி
ஊர்ந்தே அடவியிடை
சென்று தனித்தி ருந்து துயரம்
தீர்க்க முயன்றிடுவான்
மன்றிடை வாரா திருப்பான் வீட்டில்
மறைந்தே சிலவாரம்
நன்றிதை அறிந்தும் மன்னன் கடியான்
நல்லமைச் சானதினால் (36)

தந்தை யில்லை தாயார் இல்லை
சார்புகள் எதுவுமில்லை
தொந்தம் இல்லை துணைவி யில்லை
சுற்றம் பற்றுமில்லை
நந்தம் அரசனைத் திருத்திடும் வழிதனை
நாடியும் புரியவில்லை
இந்த நிலையில் உழன்றான் அமைச்சன்
என்னும் யூசருகு (37)

எழிலார் அவனின் வதனம் தன்னை
இனிதே நோக்கிடுவோர்
அழகென் றாலிவன் அழகே அழகென்
றதிசயித் தேயுரைப்பார்
பழகு மொழியும் பார்வை ஒளியும்
பண்பார் குணநலமும்
தெளிந்த மனமும் சிறந்த அறிவும்
சினமில் தன்மையுமாய் (38)

ஞானப் பொலிவும் நயக்கும் செயலும்
நாட்டின் மேற்பற்றும்
ஊனச் செயலர் மீது வெறுப்பும்
உடையோன் யூசருகு
தானம் தர்மம் தவறா வணக்கம்
தக்கோர் உடன்பழக்கம்
வானம் கவிந்த மண்டலத் தெவர்க்கும்
வாய்க்காப் பேரழகும் (39)

நிறைந்தே இருந்தும் தீமை எதையும்
நினையான் யூசருகு
சிறந்த அவன்தன் உயர்வைக் கண்டு
தேசத் தோரில்சிலர்
குறையில் நிதியத் தோடு பெண்ணைக்
கொடுக்க முன்வருவார்
அறைவான் எனக்குத் திருமண ஆசை
அடியுடன் இல்லை யென்றே (40)

மன்னன் சுறாயிக் தோழ ரோடு
மந்திரி யூசருகை
தன்னந் தனியே சந்திக் குங்கால்
சரசத் துடன்கேட்பான்
''உன்னத அழகும் ஒளிசேர் இளமை
உடைய நீயின்னும்
கன்னியர் உறவைக் கருதா திருக்கும்
காரணம் எதனாலே ?'' (41)

வேலியே பயிரை மேயும் விதத்தில்
விளங்கும் மன்னவனை
பேயினும் கொடிய தீமை விளைக்கும்
பெருங்குடி கேட்டினனை
வாயுரை கொண்டு திருத்த முயலும்
வகைபய னற்றதினால்
தாயினும் சிறந்த அன்புள அமைச்சன்
தனியாய் அழுதனனே ! (42)

அழுது பயனிலை அறவுரை பயனிலை
அரசன் நிலைமேலும்
பொழுதுக் கோர்விதம் பெண்மைச் சுவைப்பில்
புதுமை கொள்வதினால்
தொழுதும் இறைவன் உடனே ஒருவழி
தோன்றச் செயாததினால்
அழுதிடும் மனத்தில் ஆறுதல் காண
அடைந்தான் கானகமே! (43)

### சந்தம் வேறு

அந்தக் காட்டின் நடுப்பரப்பை
அன்ற டைந்தான் யூசருகு
முந்தத் தனது புரவிதனை
முடிபோட் டொருமா மரத்தினிடை
சிந்தை பொருதக் கட்டியபின்
சீலத் தோடுபுற் றரையிற்
வந்தே அமர்ந்தான் மனதிலுறும்
வருத்தம் போக்க நினைத்தவனாய் (44)

குயிலின் பாட்டும் புறாயீட்டம்
கூவும் குக்கூ வெனும்ஒலியும்
மயிலின் ஆட்டம் தருக்களிடை
மலர்ந்து சிரிக்கும் மலர்வனப்பும்
அயலி லிருந்து வந்துதனை
அணுகிச் சீண்டும் தென்றலுடன்
வயணக் காட்டின் நல்லார்ப்பும்
வரவேற் றனவாம் யூசருகை (45)

இளமை துஞ்சா யூசருகின்
இதயம் தன்னை மகிழ்விக்க
களப மலரின் வாசனையை
கலந்தே தென்றல் வீசியதும்
புளகம் அடைய மயில்குயில்கள்
பூரித் தாடிப் பாடியதும்
தளர்ந்த மனத்து யூசருகின்
சஞ்ச லத்தை நீக்கவில்லை (46)

அருவி யூற்றின் சலசலப்பும்
அன்னம் நீந்தும் தடாகங்களில்
மருவி லுயர்ந்த தாமரைப்பூ
வண்ணச் செருக்கின் கவர்ச்சியுடன்
தருக்க ளிடையே புகுந்துதரை
தன்னில் மின்னும் விண்ணொளியும்
பெருக்கும் இன்பம் யூசருகின்
பிணியைத் தீர்க்க உதவவில்லை (47)

காலம் பகலாய் மாலையெனக்
கடுகிச் சென்று கொண்டிருக்க
ஞாலம் தன்னை இருள்கவ்வ
நாடு கின்ற வேளைவரை
சீலம் நிறைந்த யூசருகு
சிந்தித் தங்கே வீற்றிருந்தான்
சாலச் சிறந்த மாலையதில்
சார்ந்த தொருமான் கூட்டமங்கே (48)

புள்ளி நிறைந்த மான்கூட்டம்
பெருத்த விழிகள் தான்துலங்க
அள்ளி அவனை விழுங்குவபோல்
அருகில் சூழ்ந்து நோக்கினவே
உள்ளி யிருந்த யூசருகின்
உணர்வைத் தூண்ட வில்லையவை
எள்ளி நகைக்க வாயினவாம்
இதுகண் டந்த மான்கூட்டம் (49)

மானின் கூட்டச் சிரிப்பொலியா
மங்கை யார்தம் சிரிப்பொலியா
கான கத்தே தனைச்சூழ்ந்து
காணும் அந்தச் சிரிப்பொலிதான்
ஆன தெவரால் எனக்காண
அதிர்ந்து பார்த்தான் யூசருகு
மான்க ளில்லை பெண்களில்லை
மாயை யோவென் றெழுந்துநின்றான் (50)

தூரத் தேயோர் புதர்அருகே
சூழ அந்த மான்கூட்டம்
நேரே நின்று யூசருகை
நிமிர்ந்து பார்த்து சிரித்ததுவே
தார கைகள் உதிர்வதுபோல்
சரக்கொன் றைப்பூ உதிர்வதுபோல்
பூரிப் போடி லம்பெண்கள்
பொலியக் கூடிச் சிரிப்பதுபோல் (51)

கேட்ட அந்தச் சிரிப்பொலியால்
கிளர்ச்சி கொண்ட யூசருகு
நீட்டித் தான்தன் இடதுகையில்
நிலைத்த வில்லின் நாணிழுத்து
பூட்டி னானே அம்பொன்றை
பொருத விடுக்க மான்களின்மேல்
நாட்டி னானே பார்வைதனை
நகைத்த தந்த மான்களெல்லாம் (52)

கூட்ட மாக உருமாறி
குமரிப் பெண்கள் வடிவெடுத்து
ஆட்டம் ஆடி இடையொடிய
அழகு காட்டிப் பேசினவே
வேட்டு வன்போல் எமைக்கொல்ல
விரும்பும் நீயோ நல்லமைச்சன்
காட்டின் அழகைக் காணவந்த
கன்னி யர்யாம் மான்களல்ல (53)

அண்டையுள்ள 'ஜின்' நாட்டின்
அழகி யர்யாம் மனிதரல்லர்
கண்ட படிக்கே உருவெடுத்தல்
கடவுள் அளித்த வரம்எமக்கே
உண்டோ அழகில் உன்போலே
ஒருவன் இந்த உலகினிலே
மொண்டு விழியால் உனதழகை
முற்றும் யாந்த ஆசையுற்றோம் (54)

சென்று வருக விடைதருவாய்
திரும்பத் திரும்ப வந்துன்னை
நன்று காண எமக்கென்றும்
நல்ல வரந்தான் நீதருவாய்
பொன்றா அமரர் அழகினிலும்
பொலியும் அழகு கொண்டவனே
என்று சொல்லி ஜின்மான்கள்
எடுத்த தோட்டமவ் விடம்விட்டே (55)

நாட்டில் அமைதி யில்லையென
நல்ல அமைதி காண்பதற்காய்
காட்டைத் தேடி இங்குவந்தோம்
காணும் இந்த இடத்தினிலும்
நோட்ட மிட்டே பெண்ணினத்தார்
நொடியில் இங்கும் வருவதென்றால்
ஓட்டம் எடுப்போம் என்றூசருகு
ஓடிப் புரவி ஊர்ந்தனனே (56)

புரவி பாய்ந்தே முன்னோட
புறத்தே காடு பின்னோட
கரத்தில் கடிவா ளம்பற்றிக்
கடுகிப் புரவி தனைத்தட்டி
விரைந்தே செல்ல ஓட்டினனாம்
வீர அமைச்சன் யூசருகு
பறந்த தந்தப் புரவியும்ம
பாய்ந்தே சபாவிற் கெதிர்த்திசையில் (57)

ஆன மட்டும் குதிரைதன்னை
அடக்கி சபாவின் திசைசெல்ல
வேண முயற்சி செய்தனனே
வீணாய் யாவும் முடிந்ததுவே
தானே புரவி சென்றதுவோ
சார்ந்தெவ ரிழுத்துச் சென்றனரோ!
போன தருணன் இரவுதந்து
புரவியோர் பூங்கா போந்ததுவே (58)

அத்தனை வேகம் அக்குதிரை
அதன்முன் ஓடிய தேயில்லை
எத்தனை தூரம் வந்ததென
எண்ணிச் சொல்ல இயலாத
மெத்தவும் நெடிய தூரந்தனை
விரைந்து கடந்து வந்திருந்தும்
நத்தும் வியர்வை நுரைதள்ளல்
நலிந்த தூசி யொன்றில்லை (59)

களைப்பும் இல்லை எனினு மங்கே
கட்டுண் டதுபோல் நின்றதுவே
அளைந்த மனத்து யூசருகோ
அச்சம் மிகவும் கொண்டவனாய்
வளர்ந்த குதிரை தனைவிட்டு
வாகாய்க் கீழே குதித்தனனே
இளந்தென் றல்காற் றப்போதங்
கினிமை மிஞ்ச வீசியதே (60)

மாலை மாறி இரவுவர
வானம் மீது மதியம்வர
சோலை யெங்கும் மலர்மணம்தான்
தொட்டு மெல்ல வீசிவர
காலை முதலாய்க் கவலையுடன்
காட்டில் இருந்த யூசருக்கு
மேலில் அலுப்பு மிகுத்துவர
விழியைத் தூக்கம் தழுவியதே (61)

முன்னம் அறியா அவ்விடத்தில்
மூளும் அச்சம் தனைவிடுத்து
என்ன செய்கின் றோம்என்னும்
எண்ணம் சிறிதும் இல்லாது
தன்னந் தனியாய்த் தரையினிலே
சாய்ந்து படுத்தான் பசியோடு
தன்னை மறந்தான் பசிமறந்தான்
சற்றைக் கெல்லாம் தூங்கிவிட்டான் (62)

ஜின்கள் நாட்டுச் சிறுதோப்பில்

எண்சீர்க்கழிலடிசந்தவிருத்தம்

வானகத்தில் புதுநிலவு பவனி வந்தது
வண்ணமலர் போன்றுடுக்கள் இறைந்து கிடந்தன
கானஒலி மதுரகீதம் சுமந்து வந்தது
கணகணத்து மேளதாளம் முழங்கி யார்த்தன
''தானதன'' வென்றொலித்த தாள லயத்தைத்
தழுவிசில கன்னியர்கள் ஆட்ட மாடினர்
தேன்அதரச் செவ்வரிகண் மங்கையர் கூட்டச்
சிரிப்பின்ஒலி பூங்காமுற்றும் எதிரொ லித்தது (63)

நிலவைமிஞ்சி விளக்கொளிகள் எங்கும் ஜொலித்தன
நிலந்தெரியா வகையில்பட்டு விரித்தி ருந்தது
மலர்க்கொடிகள் தோரணம்போல் பூத்துத் தொங்கின
மரத்திலெல்லாம் பழக்குலைகள் கனிந்தி லங்கின
உலர்ந்திடாநற் செழுமலர்கள் செடிகளி லெல்லாம்
உன்னதமாய் அழகழகாய் மலர்ந்தி ருந்தன
அலங்கரித்த விரிப்பின்மீது உணவுப் பண்டங்கள்
அருஞ்சுவையோ டுண்பதற்குப் பரப்பி யிருந்தன! (64)

வாணவெடி அதிர்வேட்டுகள் முழக்க மிட்டன
மத்தாப்புகள் வண்ணவண்ணச் சுடர்கொ ளுத்தின
ஆணழகன் யூசருகின் தூக்கங் கலைய
அவனருகில் வந்துபெண்கள் குலவை யிட்டனர்
பூணணிகள் பூண்டிருந்த அந்த மங்கையர்
பொன்மலர்க்கை சென்டவனின் உடலைத் தீண்டினர்
காணுவது கனவோஎன யூசரு குதான்
கண்விழித்துச் சுற்றுமுற்றும் உற்று நோக்கினன்! (65)

பொன்னிலான மண்டபந்தன் முன்தெ ரிவதும்
புதுமையெல்லாம் அதன்எதிரில் நிறைந்தி ருப்பதும்
கன்னியர்கள் பொன்னுலகை விட்டு வந்ததாய்க்
கருதும்படி அழகழகாய்ச் சூழ்ந்து நிற்பதும்
முன்னம்பெரும் கானகத்தில் மான்கள் வடிவில்
மேவிநின்ற கன்னியர்கள் அங்கி ருப்பதும்
தன்னுடைய கண்களினால் கண்டு பயந்தே
தாவியோட யூசருகு மெல்ல எழுந்தான்! (66)

மன்னவனே மன்னவனே எங்குசெல் கின்றாய்
வந்துபசி தீரஉண வுண்டு மகிழ்வாய்!
அன்னநடை பெண்களெங்கள் ஆட்டம் காணுவாய்
அமுதுபோன்ற எங்களிசை கேட்டு மகிழ்வாய்
கன்னியர்கள் தழுவுதலில் கவலை மறந்து
காலமெல்லாம் இன்பமோடு இங்கேயிருப்பாய்
மின்னல்நிற மேனிகொண்ட கன்னியர் உள்ள
மேன்மைமிகு ஜின்னரசன் நாடாம் இதுவே! (67)

என்றுசொல்லி வட்டமிட்டு அவனைச் சூழ்ந்தே
இனிமைகொஞ்ச பேசியவன் தன்னை மெதுவாய்
சென்றுணவ ருந்தும்படி கெஞ்சிய ழைத்தார்
சிரமந்திர குளிப்பதற்கு பன்னீர் நிறைத்தார்
நன்றுயர்ந்த ஆடை அணி பூணக் கொடுத்தார்
''நாங்களொன்றும் தீயரல்லர்'' என்றே யுரைத்தார்
''நன்றுனது நாடுசெல நீநி னைத்தாலும்
நாங்கள் உன்னை நிச்சயமாய் அனுப்புவோம்'' என்றார்! (68)

உன்னழகைப் பருகுவதே எங்களின் நோக்கம்
உன்றனுக்கோர் சிறியதீங்கும் நாங்கள் செய்திடோம்
ஜின்னரசன் தனைக்காண நீவி ரும்பினும்
சிரமமின்றி நாங்களதை நிறைவு செய்குவோம்
இன்னுமெதற் காகநீயும் பயமடை கின்றாய்
எழிலையெலாம் திரட்டிவந்த வடிவ ழகனே
தன்னைவிரும் பாதபேரை வற்பு றுத்துதல்
தருமமன்று நாங்களதை நன்க றிகுவோம்! (69)

எனவுரைத்த ஜின்குலத்துக் கன்னியர் தம்மை
ஏறெடுத்துப் பார்த்தனனே யூச ருகுதான்
புனலிலுறும் மீன்களென்ன கண்கள் படைத்த
பெண்களெல்லாம் தனைவியந்து பார்ப்ப தறிந்தான்
அனலிலிடு மெழுகாமென உள்ளம் பதைத்தான்
அவ்விடம்விட் டோடமுடி யாமல் தவித்தான்
வனத்தில்தமைக் கண்டுநகைத் திட்ட பெண்களை
மருட்சியுடன் சுட்டெரிப்பான் போன்று நோக்கினான்! (70)

இந்தவேளை தன்னிலவன் வயிறு பசியை
எழுப்பிமிக வேதனைதான் செய்ய லாயிற்று
சுந்தரமாப் பெண்களின்மேல் சென்ற பார்வையை
திருப்பியேதான் அன்னத்தட்டின் மீதுற விட்டான்
அந்தநல்ல வாய்ப்புதனை ஜின்குலப் பெண்கள்
அகலவிட்டி டாதுபற்றி அரிய உணவை
தந்துண்ணச் செய்துநன்றாய் உபச ரித்தனர்
தட்டமுடி யாப்பசியால் உண்டு தீர்த்திட்டான்! (71)

வயிறுபுடைத் திடுமளவு உண்டதின் பின்னே
வாய்கழுவி கைதுடைத்துச் சுவைநீர் பருகி
எயிற்றினிடை காவியேற வெற்றிலை போட்டே
இனியநறும் சந்தனத்தை கையினிற் தொட்டான்
முயற்சியிலே வெற்றிகண்ட ஜின்குலப் பெண்கள்
மேலுமவன் மகிழும்படி சாமரம் வீசி
அயர்ச்சிகளைப் பகன்றதன்பின் ஆசனம் ஒன்றில்
அமரவைத்து ஆடல்பாடல் களைந டத்தினார்! (72)

பத்தோடொரு கூத்துவகை யாவும் ஆடினர்
பதுமமலர் பூத்ததுபோல் சேர்ந்தே ஆடினர்
முத்தமிடு வோர்களைப்போல் கிட்ட வருவர்
முகத்தைக்கைக ளாலேதொட்டு சுடக்கு முறிப்பர்
எத்தனைநல் லழகனடி இவனுமே என்றே
இரகசிய மாகஅந்தப் பெண்கள் பேசுவர்
சித்தமகிழ் வெய்தும்படி கீத மிசைப்பர்
சிருங்கார ரசமதிலே சேர்த்து வடிப்பர்! (73)

கனியுரித்துச் சில்லோர்அவன் வாயில் தருவர்
கமகமக்கும் அத்தர்சிலர் பூச வருவர்
இனியநறும் பீடாமடித் தொருத்தி தருவாள்
எச்சிதுப்ப இன்னொருத்தி பணிக்கம் பிடிப்பாள்
குனிந்தொருத்தி பாதம்பிடித் திடமு யலுவாள்
குமிழ்சிரிப்போ டொருத்திகாதல் பார்வை வீசுவாள்
வனிதையரின் இடத்தில்சிக்கி 'யூசு ருகு'தான்
மனம்வருந்திக் கொண்டிருக்கும் அந்தப் போதிலே! (74)

எதிரிலுறும் பொன்நிறத்து மண்டப மீதில்
இறங்கிவந்து முழுநிலவு நின்றது போலே
அதிர்ந்திடாது மின்னலுருப் பெற்றது போலே
அழகுயாவும் ஓர்உருவம் கொண்டது போலே
அதுவரையில் இறைவன்படைத் திட்ட படைப்பில்
அவளைநிகர்த் தாரிலையென் றுரைக்குமாப் போலே
உதயமானாள் ஓரிளம்பெண் அவள முகினால்
ஒளிமயமாய் ஜொலித்ததந்தப் பூங்கா முற்றுமே! (75)

ஆட்டம்பாட் டார்ப்பாட்டம் யாவும் அடங்கின
அங்கிருந்த பெண்கள்எல்லாம் ஒடி மறைந்தனர்
நாட்டந்தனை மண்டபத்தின் மீதுற விட்டான்
நயனஒளி குன்றியது யூசருக்கே
ஒட்டினாள்தன் பார்வைதன்னை யூசருகின்மேல்
ஒளிகுறைந்த தந்தப்பெண்ணின் கண்ணிரண்டிலும்
ஏட்டிலாரும் எழுதவொண்ணா அழகன் அழகி
இருவருமே மூர்ச்சையுற்று வீழ்ந்தார் தரையில் (76)

## ஜின்கள்

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

காற்றினும் விரைந்து செல்லும் கணத்திலே உலகைச் சுற்றும்
மாற்றுரு பலவெ டுக்கும் மனிதரைப் போன்றும் நான்றும்
ஆற்றலுக் கிணையே யில்லை அழகினும் அவ்வா றாகும்
சாற்றுவார் இதனை மக்கள் சார்ந்தநற ஜின்க ளென்றே! (77)

நெருப்பினால் படைத்து முன்னம் நீள்புவி தன்னில் சென்று
நெறிபட வாழு மென்று நிர்மல னாமி றைவன்
தெரிவித்து ஜின்கள் தம்மை திகழுற அனுப்பி வைத்தான்
பரிவுடன் இறையு ரைத்த படியவை வாழ்ந்த சின்னாள்! (78)

பின்பவை உலகில் செய்த பீடறு நடத்தை கண்டு
மன்பெறும் இறைய வற்றை வதையுற அழித்துப் போட்டான்
பின்பவை இறைஞ்சி வேண்ட பிசாசுபோல் உலகம் தன்னில்
மன்னிடும் அருவ மாக வாழ்ந்திட வைத்து விட்டான்! (79)

நிறைபட வாழ்ந்த வாழ்க்கை நெடியவன் உரை மறுப்பால்
குறைபட மாய்ந்து கெட்டுக் கொடியபேய் பிசாசுபோன்று
மறைந்துமே உலகம் தன்னில் மனிதர்க்கு அடங்கி நாளும்
உறைந்திடும் கீழ்மை ஜின்கள் உற்றதாம் மேலும் கேளும்! (80)

பூமியும் வெறுத் தொதுக்க புனல்செடி கொடிம ரங்கள்
ஏமமில் பூண்டு புற்கள் யாவையும் வெறுத் தொதுக்க
தாமமர்ந் திருக்க வுண்ண ஜகத்திலே ஏது மின்றி
வாமமாம் அந்த ரத்தில் வதியவும் உண்பதற்கு! (81)

மானுடர் தின்றெ றிந்த மாசுடை எலும்பைச் சோற்றை
தானுணும் நிலையை ஜின்கள் தனக்கிரை யாக்கி வைத்தான்
மானுநல் லொழுக்கம் நீதி மறைவழி நடத்தை விட்டோர்
தானிதை நோக்கி யாய்ந்து தனியவன் வழி நடத்தல் (82)

நன்றென உரைப்பேன் இன்றேல் நரகிடை வீழ நேரும்
பொன்றிய ஜின்னி னத்தில் பிறந்தவன் இபுலீ சென்பான்
அன்னவன் இறைம றுப்பால் அடைந்துள கீழ்மை காண்க
இன்னுமோ உரைத்தல் வேண்டும் இறையுரை மீறல் தீதாம் (83)

ஜின்களில் ஆண்கள் பெண்கள் சேர்ந்துமே மனிதர் போல
அன்புடன் வாழ்வ துண்டாம் அகமகிழ் வோடு பிள்ளை
நன்றுற பெறுவ தற்கு நரர்தமை அழைத்துச் சென்று
பொன்றிடா வகையில் பிள்ளை பேறுபார்த் திடச்செய் யும்மாம் (84)

இறைமறுப் புடைய ஜின்கள் இடையிலே வாழ்ந்த தாலே
குறைந்த எண்ணிக் கையுள்ள கோதறு நல்ல ஜின்கள்
மறைந்துமே அழிந்து போகும் வகைபட நேர்ந்த தாமே
மறையவன் இவற்றை மேலாய் வாழ்ந்திடப் பணித்தான் நன்கு (85)

மானிடர் வாழாத் தீவில் மலைபெறும் காட்டோ ரத்தில்
தானிவை நாட மைத்து துவிபிலே அரசை வைத்து
ஊனுடல் நகரம் வீடு ஒன்றுமே மனிதர் கண்ணில்
தோன்றிடா தகைமை செய்து சுகப்பட வாழு மாமே (86)

இந்தநல் வகையைச் சேர்ந்த ஈடில்லா ஜின்கள் கூட்டம்
கந்தமார் சபாநன் நாட்டிற் கடுத்துள காட்டிற் கப்பால்
சுந்தர நாட மைத்தே சோர்விலாப் பொலிவி னோடு
சந்ததம் இன்ப மாகத் தரமுடன் வாழ்ந்த தென்பர் ! (87)

ஆட்சியில் நல்ல வேந்தன் அமைச்சரும் அவ்வா றாமே
வாட்டிடும் வறுமை இல்லை வாழ்க்கையில் தீமை இல்லை
ஈட்டிடும் செல்வச் சேர்ப்பும் இழிசெயல் ஏதும் இல்லை
பூட்டிலை காப்பு மில்லை பொறாமையுள் ளோரு மில்லை!(88)

கல்வியில் செருக்கு மில்லை கருமத்தில் பாவ மில்லை
நல்வித உழைப்பி னாலே நாட்டினை மேன்மை யாக்கி
வல்லெழில் காட்டி வாய்மை வாழ்வினில் காட்டி, அன்பு
செல்லிடம் எங்கும் காட்டி சிறுமையை ஓட்டி நெஞ்சில் (89)

இறைநெறி கூட்டி, நாட்டில் இடும்பையை ஒட்டி, ஆட்சி
நிறைவுறக் காட்டி, மக்கள் நெஞ்செல்லாம் இன்ப மூட்டி
முறையுடன் அரசன் ஆள மேன்மையில் நாட்டோர் வாழ
உறைந்தனன் ஆங்கே வேந்தன் உயர்வெலாம் சிறப்புற்
[றோங்க! (90)

மனிதரை நாணச் செய்யும் மாண்புடன் ஜின்கள் கூடி
தனியர சொன்ற மைத்து, தாழ்விலா வாழ்வு பெற்று
இனிதுற வாழ்ந்த தங்கே இராஜநன் மனைவி கொண்டான்
நனிதரும் துணைவி யோடு நாளுமே இன்பம் கண்டான்! (91)

கனியென ஜின்னின் வேந்தன் கணவியோர் பெண்ணைப் பெற்றாள்
வனிதையர் வாழ்த்து ரைக்க மகிழ்ச்சியெங் குப் நி றைக்க
புனிதமார்க் குழந்தை யென்றே போந்துளோர் ப த்து ரைக்க
இனிமைசேர் உமையிரத் தென்றே யிட்டனர் பெயர தற்கே
(92)

உமையிரத் தென்னு மந்த உயரெழிற் குழந்தை நன்றாய்
அமைவுறத் தவழ்ந்து மூர்ந்தும் அடிதொடர் நடைப யின்றும்
இமையவர் தேயப் பெண்ணும்இவட்கிணை யிலையென் றோதச்
சமைந்தனள் பருவ முற்றே சந்திரன் நாணக் கண்டே (93)

கரும்பிலே இனிப்புப் போல கனிகளில் சுவையைப் போல
அரும்பிலே மலர்ச்சி போல அதனிடை மணத்தைப் போல
வரும்புது வசந்த கால மலர்ச்சியின் பொலிவைப் போல
பெரும்புகழ் உமையிரத் தென்பாள் பெண்பெறும் பருவம் பெற்றாள்
(94)

காலையில் கிழக்கு வானில் கமழ்ந்தெழும் பருதி போன்றும்
மாலையில் கடலைத் தொட்டு வதிந்தெழும் நிலவைப் போன்றும்
சோலையில் மலர்க்கு லத்தில் தோன்றிடும் அழகைப் போன்றும்
கோலமா அழகு வந்து கூடிய துமையிரத் தின்பால் (95)

மரகதச் சுடரோ என்பார் வைரமா ஒளிர்வோ என்பார்
தரமுயர் மாணிக் கத்தின் தனிஒளி இதுவோ என்பார்
பருமுத் தினிடையி ருந்து பளிச்சிடும் பொலிவோ என்பார்
நெருப்புடல் உமையி ரத்தை நேரிலே காணும் பெண்கள் (96)

மதுவென மயக்கும் மேனி மாமழை போன்ற கூந்தல்
புதுமலர் வதனம் நெற்றிப் பொன்னிற நிலவுக் கீற்று
அதரமோ பவளத் துண்டம் அளிசெயும் பற்கள் முத்தாம்
இதுவொரு குமிழம் என்றே யியம்பிடும் வகையில் மூக்கு (97)

பளிங்கினால் செய்த குண்டில் பளிச்சிடும் மின்னல் சேர்த்தே
விளங்கிடும் நெடிய கண்கள் மீதமும் இவ்வா றாக
துளங்கிடும் அழகு மிக்க சுந்தரி உமையிரத் தென்றே
களங்கமில் வானப் பெண்ணும் கழறுமே காண நேரின் (98)

இதற்குமுன் னிவளைப் போல எவளுமே இவ்வை யத்தில்
உதித்தது மில்லை மேலோன் உவந்துமே படைத்த தில்லை
நிதியென ஜின்னி னத்தார் நெஞ்செலாம் மகிழ வந்தாள்
வதுவையாம் இவளுக் கேற்ற வாலிபன் எங்கே யுள்ளான் (99)

எனும் உரை ஜின்கள் வாழும் இடமெல்லாம் ஒலிக்கக் கேட்ட
நனிமிகு வாலி பச்சின் வர்க்கமே மோக முற்று
புனையநல் லாடை பூண்டு பொலிவுற அணிகள் சூடி
நனிதரு வாடை பூசி நடையிலே மிடுக்குக் காட்டி (100)

அரண்மனை நாடிச் சென்றே அரசமா ஜின்னைக் கண்டு
திருமிகு நுமது பெண்ணைத் திருமணம் செய்ய வந்தோம்
தருகநீ ரெமக்கே என்று தனித்தனி யாகக் கேட்டார்
வருமவர் தன்னைப் பார்த்து மகிழ்ந்தஜச் சின்கள் வேந்தன்
(101)

நாமெல்லாம் ஜின்கு லத்தார் நமக்குளே ஏற்றத் தாழ்வு
தீமைசேர் சாதி பேதம் சிறிதுமே என்று மில்லை
தாமுயர் வென்ற எண்ணம் தனத்தினால் படிப்பால் இல்லை
தாமதம் இன்றிப் பெண்ணை தருவதில் அட்டி யில்லை (102)

சூடலாம் அவளை மாலை சொல்லிதில் மாற்றம் இல்லை
பீடுடன் எழுவீர் இந்தப் போதிலே அவளைக் கண்ணால்
நாடியே காண்பீர் அந்த நங்கைநும் மவரில் யாரை
கோடிடா வகையில் ஏற்றுக் கொள்கிறாள் என்று கேட்போம்
(103)

தந்தைதாய் சுற்றம் நட்பு சார்ந்துதேர்ந் தெடுத்திட் டாலும்
அந்தநற் பெண்வி ருப்பம் அறிவதே யுசித மாகும்
இந்தநல் வழியை நாமும் ஏற்றுளோம் தொன்மை யாக
அந்தநல் மரபிற் கேற்ப அணுகியென் மகளைக் கேட்போம்
(104)

என்றனன் ஜின்கள் வேந்தன் எழுந்தனர் வாலி பத்தார்
குன்றெனும் தோள்கள் விம்ம குதுகலம் மனதிற் பொங்க
மன்றலில் தனக்கே அந்த மங்கைதா ரணிவா ளென்றே
பொன்றிடா நினைப்பி னோடு போந்தனர் காளை யோரே
(105)

**சந்தம் வேறு**

வண்டார்த் தொலிக்கும் பொழிலொன்றில்
மதியம் சூழ்ந்த இரவினிலே
கண்டோர் வியக்கும் கனகத்தூண்
கணக்கின் றிலங்க நெடுந்தூரம்
அண்டா அகலம் உடையதுவாய்
அணிசேர் வெள்ளித் தரையதுவாய்
தண்டார் எங்கும் கோத்திலங்கத்
தரைமேல் பட்டுத் துணியிலங்க (106)

நன்றாய் அமைந்த கூறையில்லா
நனிசேர் நெடுங்கால் மண்டபத்தில்
குன்றா எழில்சேர் உமையிரத்துக்
கோடி சூரியப் பேரொளியாய்
அன்றே அலர்ந்த தாமரைப்பூ
அனைய தோழி பலர்சூழ
சென்றே அமர்ந்தாள் வானினிடை
திகழும் மதியும் உடுக்களும்போல் (107)

மண்ட பத்தை சூழஎங்கும்
வாசம் கமழும் மலர்க்காடாம்
அண்டி அவற்றில் தேன்அருந்த
ஆர்க்கும் வண்டின் நாதஇசை
அண்டை யிருந்த நீரூற்றால்
அருவி எழுப்பும் தாளலயம்
மண்டி வளர்ந்த மரத்திலெல்லாம்
வதியும் புட்கள்[1] வாழ்த்தொலிப்ப (108)

---

1. புட்கள்-பறவைகள்,

இந்த இனிய சூழலிலே
    எழிலார் உமையிரத் தினைவிரும்பும்
சிந்தை யோடு வாலிபர்கள்
    சேர அரசன் மகிழ்வினொடு
வந்தான் வரும்நல் வாலிபரை
    மகள்தான் கண்டு தன்விருப்பம்
எந்த யுவன்மேல் எனக்காட்ட
    ஏற்ற வகையில் அவள்முன்னே (109)

கந்தம் கமழும் தோப்பினிலே
    கனிகள் உதிர்க்கும் தருக்களிடை
செந்தா மரைப்பூ பூத்திருக்கும்
    செழிய ஓடை அருகினிலே
வந்தே வசந்தம் உடல்தீண்ட
    மகிழ்ந்தே உமையிரத் தாளிருக்க
அந்த அவளைத் தோழியர்கள்
    அரும்பு கோக்கப் பணித்தனரே (110)

இந்த வேளை இவள் தந்தை
    எழிலார் வாலி பர்சூழ
வந்தான் வந்தோர் உமையிரத்தை
    வாசம் ஈர்க்கும் மூக்கதுபோல்
சுந்த ரத்தன் கண்களினால்
    சுண்டி யீர்த்துப் பார்த்தனரே
முந்த அவளும் அவர்களையே
    மெதுவாய் நிமிர்ந்து நோக்கினளே (111)

வானில் மின்னல் பூத்ததுபோல்
    வைரக் குவியல் சிலிர்த்ததுபோல்
கானில் நாக மணியொன்று
    கழன்று கிடந்து பொலிவதுபோல்
வானச் சுடரெல் லாமொன்றாய்
    வடிவம் எடுத்து வந்ததுபோல்
கானக் குரலாள் உமையிரத்தைக்
    கண்டார் வந்த வாலிபர்கள். (112)

கண்டார் கண்ட போதினிலே
கண்க ளெல்லாம் ஒளியிழக்க
கொண்ட ஆசை மனத்தினிலே
குமைந்தே அடங்கிப் படுத்திருக்க
திண்டோள்* தரையில் கிடந்திருக்க
நேசம் மூச்சை இழந்திருக்க
உண்டாக் கியவன் உலகினிடை
ஊர்ந்தார் பெற்றோர் அழுதிருக்க (113)

பார்த்தான் அந்த நிகழ்ச்சிதனை
பதைத்தான் அரசன் துடிதுடித்தான்
சேர்த்தான் நடையை உமையிரத்தும்
சேடிப் பெண்கள் பின்தொடர
ஆர்த்த அந்த நிகழ்ச்சியினால்
அதிச யித்தார் ஜின்னினத்தார்
வார்த்தை எதுவும் பேசவில்லை
மன்னன் வீட்டு நிகழ்ச்சியன்றோ (114)

மன்னன் மகளை மணக்கவந்து
மயங்கி வீழ்ந்தே இறந்தாரெனும்
உன்ன அரிய செய்திஜின்கள்
உலக மெங்கும் பரவியதே
மன்னன் இந்த நிகழ்ச்சிதனை
மனைவி இடத்தில் புகன்றனனே
என்ன செய்வோம் மகள்மணத்தை
எந்த விதத்தில் முடிப்போமென (115)

சொல்லி அரசி அரசன்முனம்
சோர்ந்து தரையில் வீழ்ந்தனளே
வல்ல துணிவு மிகுத்துடைய
வாலி பஞ்சேர் ஜின்னிற்சில
எல்லை இல்லா அழகிதனை
ஏற்க வந்து வந்திறந்தார்
இல்லை மணம்தான் இனிஇவளுக்
கென்றே அரசன் நினைந்தனனே (116)

---

* திண்டோள்-திரண்ட தோள்

ஆனால் இந்த நிலையிவளும்
அடைந்த விதம்தான் யாதென்றே
தானே அறியத் தனியாக
தகுந்தோர் உரையைக் கேட்டனனே
மானா மிவளைப் பிசாசொன்று
மகிழ்ந்து பற்றி இருப்பதுவாய்
கோனை நிகர்த்த மந்திரத்தான்
குறிபார்த் தெடுத்துக் கூறினனே (117)

மருத்து வத்தான் நோயென்றான்
மற்றோர் விதிமேல் பழிபோட்டார்
இருத்தல் தீதாம் இவள் ஊரில்
என்றும் சிலபேர் இசைத்தனரே
அருத்த மற்ற அவ்வசனம்
அரசன் மனத்தைக் கலக்கியதே
வருத்த முற்றே அமைச்சரின்பால்
வகுத்தே விளக்கம் கேட்டனனே (118)

ஊருக் கப்பால் தனியிடத்தில்
உப்ப ரிக்கை மாளிகைகள்
சேர அமைத்துப் பூங்காவும்
சின்னஞ் சிறிய நீர்நிலைகள்
*கார்கண் டாடும் மயில்மான்கள்
காவல் பெண்கள் உடன்வைப்போம்
பாரம் குறையும் பின்னாலே
பார்ப்போம் என்றார் கள்ளமைச்சர் (119)

அந்தப் படிக்கே நொடிப்பொழுதில்
ஆக்கி அதன்பால் உமையிரத்தை
சொந்தத் தோழி மார்களுடன்
சுற்றிக் காவல் பெண்களுமாய்
நிந்தை அகல வைத்திட்டான்
நித்தம் சென்று பார்த்திட்டான்
விந்தை மகளைக் காணுங்கால்
விம்மும் துயரில் வாழ்ந்திட்டான் (120)

---

*கார்-மேகம்

கன்னல் தேனாம் உமையிரத்தை
கருதும் இளைஞர் எவருமிலர்
அன்னை நோயில் படுத்திட்டாள்
அரிய மகளின் நிலைகண்டு
துன்னும் அவளின் துயர்போக்கச்
சொன்னான் அரசன் ஆறுதல்கள்
இன்ன நிலையில் காலப்புள்
இறக்கை கட்டிப் பறந்ததுவே (121)

பூங்கா தன்னில் மாளிகையில்
புகழுக் குரிய உமையிரத்தாள்
தாங்கும் தோழி புடைசூழ
தனியே காலம் கழித்தனளே
ஓங்கும் எழில்சூழ் பூங்காவின்
ஓரம் கூட ஆண்மக்கள்
தாங்கா வெயில்மழை தனில்கூட
சார்ந்து செல்ல அஞ்சினரே (122)

மானும் மயிலும் மகிழ்ந்தாட
மஞ்சம் மீது கிளிபாட
தானும் தனது தோழியரும்
தங்கிப் பூங்கா மாளிகையில்
தேனும் பாலும் கலந்துண்டு
திளைக்கப் புனலில் தினமாடி
கான கத்தில் போயமர்ந்து
கதைகள் பேசி வருவாரே (123)

இந்தப் பழக்கம் மிகுத்துவர
இனிதாய் ஒருநாள் கானகத்தில்
முந்தி ஓடும் ஒருத்திதனை
முடுகிப் பிடிக்க மற்றவர்கள்
பிந்தி ஓட வெகுதூரம்
பிணைந்தே காட்டில் சென்றுவிட்டார்
அந்த வேளை தன்னிலந்த
அரிய கான கத்தினிடை (124)

வந்தே யிருந்த யூசருகை
வகையில் கண்டு விட்டனரே
இந்த அழகன் போலழகன்
இகத்தில் இல்லை எனச்சொல்லி
விந்தை அழகி உமையிரத்தின்
விழிக்கன் னானைக் காட்டினரே
சிந்தை தன்னில் அவள்அவனை
சிறக்க நினைத்து நின்றனளே (125)

நாணம் முகத்தில் சிவப்பேற்ற
நளின உடலம் வியர்த்தொழுக
காணும் அந்தக் காளைதனை
கண்டு நெஞ்சம் துடிதுடிக்கப்
பேணும் பெண்மை பண்புவந்து
பிடரி பிடித்துந் தித்தள்ள
நாணிற் கழன்ற அம்பொக்க
நயந்தாள் உமையிரத் தாள்பூங்கா (126)

பின்னே வந்தார் தோழியர்கள்
பெருமூச் சுடனே கட்டிலிலே
தன்னை யிழந்த நிலையினிலே
தவித்தே கிடந்தார் உமையிரத்தாள்
அன்னாள் நிலையைக் கண்டறிந்த
அன்புக் குரிய தோழியர்கள்
சொன்னார் அவனை நொடியிலிங்கே
தூக்கி வருவோம் நாங்களென்றே (127)

படுக்கை விட்டே எழுந்தமர்ந்து
பகர்ந்தாள் மெதுவாய் உமையிரத்தாள்
அடுத்தவன் வந்தெனைக் கண்டானேல்
அவனின் ஆவி பிரிந்திடுமே
தொடுக்கு மமது செயலாலே
துயரம் மேலும் பெருகிடுமே
விடுப்பீர் உமது நினைப்புதனை
விதிக்கு முண்டோ நன்மருந்து (128)

தாயா ரேச ஊரேச
தகாத செயலைச் செய்வதினும்
பாயோ டிருந்து நினைந்துருகிப்
பட்டு மாய்தல் மேலன்றோ
தோயும் அடக்கம் பெண்ணுடைமை
சொந்தத் தந்தை கட்டளையை
மாய விடுத்துக் கான்சென்றோம்
வந்த வினைக்கு நாணிடுவோம் (129)

இந்த அளவோ டிதைவிடுப்போம்
என்னை விட்டே நீர்செல்வீர்
பந்த முள்ள தோழியரே
பாவச் செயலை எடுத்தியம்பி
நந்தம் இறைவன் மன்னிப்பை
நாடித் துதித்துப் பெற்றிடுவோம்
சிந்தை இதையே விருப்புதடி
செல்வீர்!'' என்றாள் உமையிரத்தாள் (130)

போனார் தோழிப் பெண்களெல்லாம்
புதையல் கிடைத்தும் நம்மரசி
ஏனோ மறுக்கின் றாளென்றார்
எடுத்து வருவோம் அவனைஎன்றார்
தானாய் அவனை இவள்பார்க்கும்
தகைமை செய்து வைத்திடுவோம்
தேனாம் நமது முடிவென்றே
செப்பிச் சென்றே யூசருகை (131)

மீண்டும் கண்டார் அவன்முன்னே
விளங்கும் மான்க ளாய்நின்றார்
தாண்டிக் குதித்தார் அவன்கவனம்
தன்னை யிழுக்கச் சிரித்திட்டார்
பூண்டான் அவனும் வில்கையில்
பெண்க ளாகி நிலைசொன்னார்
தூண்டில் கண்ட மீனதுபோல்
*துரகத் தேறி யோடினனே (132)

* துரகம் = குதிரை

இழுத்து வந்தார் துரகமதை
யாரும் காணா நிலையினிலே
கொழுத்த அந்தக் குதிரைதனை
கொண்டே வந்தார் பூங்காவுள்
விழித்தான் புதிய இடம்கண்டு
வீரன் அழகன் யூசருமே
அழுந்தமாக அவன் ஆங்கே
அயர்ந்து தூங்க மந்திரித்தார் (133)

படுத்தான் எழுந்தான் உணவுண்டான்
பாடல் ஆடல் ரசித்திட்டான்
அடுத்த கணத்தில் உமையிரத்தை
அருகே யிருந்த மாளிகைமேல்
தொடுத்த விழியால் கண்டிட்டான்
தோகை யவளும் பார்த்திட்டாள்
அடித்த புயலில் வீழ்வதுபோல்
அவளும் அவனும் வீழ்ந்திட்டார்! (134)

## எண்சீர்க்கழிலடிசந்தவிருத்தம்

யூசருகைக் கண்டுமையி ரத்தென் னும்மயில்
உயிர்ப்படங்கி மூர்ச்சையுற்று வீழ்ந்ததைப் பார்த்து
மோசமிக வந்ததென வெண்ணி பயந்தே
முன்பொழிந்த தோழியர்கள் ஓடியே சென்று
பாசமுடன் உமையிரத்தைத் தூக்கி யெடுத்து
பதைபதைக்க மூக்கில்கை வைத்துமே பார்த்தார்
நாசியிடை சுவாசமிகச் சிறிய அளவில்
தவிழ்ந்துவெளி வருவதறிந் தச்சம் தவிர்த்தார் (185)

ஓடியொரு பெண்சிறிய கலச மொன்றிலே
[1]உதகம்நிறைத் தெடுத்துவந்து முகத்தில் தெளித்தாள்
கூடிநின்ற தோழியரை விலக்கிப் புகுந்து
குளிர்விசிறி கொண்டொருத்தி வீசிட லானாள்
சேடியரின் உபசரிப்பால் உமையிரத் தென்பாள்
சிலிர்க்கவுடல் கண்திறந்து சுற்றி நோக்கியே
ஏடியந்த வாலிபர்தான் என்ன ஆயினார்
எனத்தனது [2]கிஞ்சுகவாய் திறந்துமே கேட்டாள் (136)

---

1. உதகம்-தண்ணீர் 2. கிஞ்சுகம்-கிளி

பாய்ந்தஅந்த சொல்லின்பொருள் புரிந்த தோழியர்
பாவையவள் காதலறிந் துள்ளம் மகிழ்ந்தார்
தோய்ந்தபெருங் காதலைப்போல் பாச உணர்வைத்
தூண்டுகின்ற சக்திவே றில்லை யென்பதை
ஆய்ந்தறிய இவளின்நிலை ஒன்றே போதுமென்
றுவகையுடன் தங்களுக்குள் கூறி மகிழ்ந்தார்
வாய்ந்தபே ரழகியுமையி ரத்தா ளைக்கண்ட
வாலிபர்கள் பிழைத்ததில்லை என்ற நினைப்பு (137)

மேவியதும் தோழியர்கள் அவ்விடம் விட்டே
விரைந்தோடி ஓர்நொடிக்குள் யூச ருகுள
காவடைந்து கவலையோடு பார்க்க லாயினார்
கண்விழித்தான் அந்தப்போதில் யூச ருகுதான்
பாவையர்கள் அவன்வுயிர்த்த நிலையினைக் கண்டு
பதமதிவான் தொடுமளவும் எகிறிக் குதித்தார்
சாவிவனைத் தொடவுமஞ்சி ஓடிய தாலே
சாலுநம திளவரசி திருமண மென்றார் (138)

தேனையுண்ட நாவுதட்டைத் தடவுதல் போல
தினைவிதைத்தான் முளைவரவை நோக்குதல் போல
ஞானவான்கள் இறையுதிப்பைக் காண விழைந்தே
நனிசிறக்கத் தன்னைத்தான் பார்ப்பது போல,
கானகத்தில் வேடன்மான் தேடுவான் போல
கவிஞன்புது உவமைதேடி அலைவது போல
ஆணழகன் யூசருகு உமையிரத் தாளை
அகத்திருத்தி மண்டபத்தை நோக்கிட லானான் (139)

பொன்னொளிர்வு பூணு மெழில மண்டபம மீது
புதுநிலவு பூத்ததுபோல் நின்றது பெண்ணா?
மன்னும்வெறுந் தோற்றமதா என்ற நினைப்பு
மனத்திலெழ யூசருகு திகைப்பினி லாழ்ந்தான்
தன்னுடைய மனத்துறுதி தன்னை மாற்றிட
தனதுமுன்னே தோன்றியதோ அந்த வடிவம்
என்றநினைப் பெழுந்திடவே யூச ருகுவின்
இருவிழியும் மண்டபத்தை மீண்டும் நோக்கின (140)

புதியஇடம் புதியநிலை புதிரை எழுப்ப
புகுந்துவிட்ட ஆசைமனத் துணிவை எழுப்ப
வதியுமிளம் பருவமது உணர்வை எழுப்ப
வசந்தகால தென்றல்மனக் கிளர்ச்சி கொடுப்ப
விதியுமந்த இருவர்க்கும் ஒத்தே யிருப்ப
மேலவனின் ஆணைப்படி யாவும் நடப்ப
அதிசயிக்கும் விதத்திலன்று யூச ருகெனும்
ஆணழகன் தனதுபோக்கில் புதியவ னானான்! (141)

அந்தநிலை தன்னிலவன் தோழிப் பெண்களை
அருகழைத்து இனிமையாகப் பேசிட லானான்!
'சுந்தரிகாள் சற்றுமுன்னே மண்டபம் மீது
தோன்றியபெண் உண்மையிலே யாரெ'னக் கேட்டான்;
அந்தஅவள் இப்பொழுது என்ன ஆயினாள்?
அவளைநானும் மீண்டும்காண முடியுமா என்றான்
வந்துவிட்டான் யூசருகு வழிக்கென் றறிந்த
மங்கையராம் தோழியர்கள் ஓட்டம் பிடித்தார் (142)

தோழியரைக் காணாததால் உமைபிரத் தாள்தான்
சுடர்முகத்து யூசருகின் மீதிலே கொண்ட
ஆழியனற் காதல்தரும் துணிவதி னாலே
அகத்திலெழும் புதியதொரு பரவசத்தாலே
ஊழியூழி யாகஉள்ள மரபினை விட்டே
உந்தியெழுந் தோடிநின்றாள் மண்டப மீதே
ஆழிமீது புதுநிலவு புறப்படக் கண்ட
அல்லியானான் யூசருகு மந்தப் போதிலே (143)

நான்குகண்கள் பேசியதாம் நாடு மகிழ
நாணந்திரை இட்டதுவாம் மரபு மகிழ
தேன்மலர்கள் உகுத்தனவாம் தருக்கள் நிறைய
சிங்காரப்பண் பாடினவாம் புட்கள் இனிய
மான்மதத்தை பரப்பியதாம் வாசம் புதிய
[1]மஞ்ஞை நடமாடியதாம் இறக்கை விரிய
கூனரும்பு முல்லைபடர் கொம்பினைப் பற்றி
குளிர்ந்ததென்றல் ஊதியதாம் காதல் வெற்றியை (144)

---

[1]மஞ்ஞை = மயில்

ஓடிவந்த தோழிப்பெண்கள் மண்டபம் மீதில்
ஒளிவிளக்காய் உமையிரத்தாள் நிற்பதைக் கண்டார்
ஆடகப்பொன் மேனிகொண்ட யூசுருகுதான்
அவளைத்தன திருவிழியால் பார்த்த நிலையில்
ஈடிலாத பூங்காவிடை மேடையின் மீதே
இருவிழியும் இமைத்திடாது நிற்பதைக் கண்டார்
ஊடேயிரு பேர்களையும் காத லெனும்மின்
இறுகபிடித் திருப்பதறிந் துள்ளம் மகிழ்ந்தார் (145)

புறநிலையை மறந்துநிற்கும் உமையி ரத்தாளின்
பின்புறமாய் சென்றொருத்தி கண்ணைப் பொத்தினாள்
''எரியுதடி கண்கள்கையை எடடி'' யென்றே
இதமுறவே உமையிரத்து கூறிட லானாள்
''தெரிவதைக்கை மறைத்ததினால் மனமெ ரியுதா
சிமிட்டிடாது பார்த்ததினால் கண்ணெ ரியுதா
புரிந்துகொண்டோம் உன்நிலையை என்பதி னாலே
பொய்யுரைத்தால் நாங்களொன்றும்ஏ மாறிட
மாட்டோம் (146)

என்றுசொல்லி கையெடுத்தாள் பொத்திய தோழி
இணைந்துநின்ற தோழியர்கள் நகைஒலி செய்தார்
கொன்றுவிடு வாளைப்போன்று தோழியர் தம்மை
கோதையவள் நோக்கியுமே மெல்ல நடந்தாள்
சென்றறையில் படுக்கையின்மேல் சாய்ந்திட லானாள்
சேடியர்கள், ''அவனைபபிடித் திருக்குதா'' என்றார்
''ஒன்றுமக்குச் சொல்லுகின்றேன், அவரை இன்றினான்
உயிர்த்திருக்க முடியாதிது மெய்''யென் றுரைத்தாள்
(147)

சென்றிதனை வேந்தருக்கு நாங்கள் சொல்லுவோம்
திருமணநாள் குறிப்பதற்குத் தூண்டுதல் செய்வோம்
வென்றுவரு வோமெனவே தோழி யர்சிலர்
விரைந்துரைத்து மிகவிரைவாய் அறையைத் தாண்டினர்
''மன்றல்காண மகிழ்ந்துசெல்லும் தோழிப் பெண்களே
வாலிபரின் மனமறிய வேண்டாவோ'' என்றாள்
''ஒன்றுசேர்ந்த உங்கள்பார்வை ஒன்று போதாவோ
உளமறிய அவரை என்ன கேட்க வேண்டுமாம்'' (148)

இந்தஉரை பின்னையொரு தோழி யுரைத்தாள்
இன்னொருத்தி இளவரசி கூற்றுநன் றென்றாள்
"அந்தஆளு பெண்ணைக்கண்டால் ஓட்டம் பிடிப்பார்
ஆதலாலே கேட்டறிதல் அவசிய" மென்றே
பிந்திநின்ற தோழிசொன்னாள் அவளின் கூற்றினை
பின்மொழிந்தார் வேறுசில சேடிப் பெண்களும்
"முந்தஅவர் தன்னையி ராமுற்றிலும் காப்போம்
விடிந்தபின்னர் மற்றவற்றை கவனிப்போம் என்றே" (149)

மூலையிலே நின்றிருந்த தலைநரை கண்ட
மூதாட்டி போன்றஒரு சேடியு ரைத்தாள்
"காலைவரை பொறுத்திருக்கக் கூடுமா இந்தக்
கன்னி" யென்று வேறொருத்தி சொல்லிச் சிரித்தாள்
"வேலையற்ற நொணநொணப்புக் காரச் சேடிகாள்
வீணுரைகள் போதுமடி செல்லுங் களெ"ன்றாள்
சோலையிலே தங்கியுள்ள வாலிபர் நன்றாய்
தூங்குதற்கு உதவிசெய்ய இளவ ரசிதான் (150)

"செல்லும்படி சொல்லுகின்றார் வாங்கடி செல்வோம்
சிந்தனையில் இளவரசி அவரைக் கண்டுமே
நல்லுரைகள் பேசிடட்டும் நயந்தும கிழட்டும்
நாமெலாமிங் கிருப்பதினி தீதடி!" என்றே
வெல்லம்போல இளவரசிக் கினிக்கும் உரையை
வேறொருத்தி விளக்கமுடன் இனிதாய் உரைத்தாள்
எல்லையிலா உலகினுக்கு வெளிச்ச மளிக்கும்
இன்பநிலா பார்த்திருந்த திந்நி கழ்ச்சியை (151)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய சந்தவிருத்தம்

நிலவு சிரித்தது வானிருந்து
நெடிய உடுக்கள் சிரித்தனவே
மலர்கள் செடிகொடி மரத்திருந்து
மலர்ந்தே சிரித்தன தேனுகுத்து
நலமே விளைக்கும் கீதம்தனை
நாடிப் பரப்பின புட்களெல்லாம்
உலகை மறந்தான் காதலினால்
உயர்ந்த குணத்தான் யூசருமே (152)

கண்டஅப் பெண்ணை மனத்திருத்தி
　　கணமும் அவளை மறவாமால்
மண்டும் ஆசைக் குடனாகி
　　மதுவுண் டவனின் நிலையானான்
அண்டை நாட்டில் தனியாக
　　யாரோ ஒருத்தி தோட்டத்திலே
உண்டு மகிழ்ந்து இசைகேட்டே
　　உயர்வார் நடனம் நாடகத்தை (153)

கண்டு களித்தே இருக்கையிலே
　　கன்னி யொருத்தி மண்டபத்தில்
வண்டார் குழல்தன் பாதந் தொட
　　வந்தே தோன்றி எனைப் பார்த்தாள்
கண்டோ அமுதோ அவளதரம்
　　கனியோ மதுரச் செம்பாகோ
உண்டோ இவையோ எனச்சாற்றும்
　　ஒளிசேர் மின்னல் இடையுடையாள் (154)

பொன்னால் ஆன மண்டபத்தில்
　　பொலியத் தோன்றி கண்வலையில்
என்னைச் சிக்க வைத்துவிட்டே
　　எங்கோ ஓடி மறைந்துவிட்டாள்
மன்னும் அவளின் வடிவந்தனை
　　மறக்க என்னால் முடியவில்லை
மின்னோ பெண்ணோ தேவதையோ
　　விளங்கா நிலையில் தவிக்கின்றேன் (155)

அங்கம் அங்க மாகஅவள்
　　அழகு தன்னை எடுத்துரைக்க
பொங்கும் ஆசைக் களவில்லை
　　புகல அறியேன் வார்த்தைகளை
எங்கே சென்று அவைகற்பேன்
　　ஏதம் நிறைந்த நிலையானேன்
பங்க யப்பொன் அடிநோவ
　　பதைத்தே எனது மனம்நோவ (156)

அன்னம் நாணும் நடையுடையாள்
அமுதம் நாணும் முகமுடையாள்
துன்னும் சுடர்கள் அத்தனையும்
தோற்கும் தமது கண்கொண்டு
என்ன நினைத்தோ எனைப்பார்த்தாள்
எதையோ கருதி ஏகிவிட்டாள்
அன்னாள் வசமாய் ஆகிவிட்டேன்
அவளை நினைத்துத் தவிக்கின்றேன் (157)

''டலர்காள் மணத்தை வீசாதீர்
மதியே ஒளியை உமிழாதே
அலர்ந்த மலரில் தேனெடுக்கும்
அரிய வண்டின் கூட்டங்காள்
பொலியக் கீதம் இசைக்காதீர்
போனாள் இருக்கும் இடம்செல்வீர்
நலிந்த எனது மனம்மகிழ
நாடி அவளை வரச்செய்வீர் (158)

குயில்காள் அவளின் இருப்பிடத்தைக்
கொஞ்சம் சொல்ல லாகாதா
மயில்காள் என்னை அவளிடத்தில்
மகிழ அழைத்துச் செல்வீரா
புயலை நிகர்த்த கூந்தலுள்ள
பெண்ணாள் மாயை மருட்டுதலால்
சுயமாய் அவளுக் கொருதீங்கும்
செய்யா வெனையேன் வருத்துகிறாள் (159)

அவளை யென்பால் வரச்செய்ய
ஆகா தென்றால் என்நிலையை
பவளம் போன்ற இதழ்கொண்ட
பாவை யின்பால் கூறிடுவீர்
''சுவனப் பெண்ணே உனக்காக
தோப்பில் காத்தே கிடக்கின்றான்
நவமே மிகுந்த எழில்கொண்ட
நல்ல இளைஞன்'' என்றேதான் (160)

இதமா யெடுத்துக் கூறிடவே
    எனது தூதாய் ஏகிடுவீர்
பொதியும் நாவல் பழம்போன்றும்,
    பெண்கள் கரிய விழிபோன்றும்
வதியும் வடிவும் வண்ணமுமே
    வாய்க்கப் பெற்ற வண்டுகளே
*நதியைக் கால்க ளாய்க்கொண்டூர்
    நயந்தேன் 'நும்பால் விருந்தினன்யான்'' (161)

என்றான் வண்டால் தூதுசொல
    இயலா தென்னும் உண்மையினை
நன்றே யறிந்த யூசருகு
    நலிக்கும் காதல் வசப்பட்டே
பொன்றா அறிவை மழுக்குகின்ற
    போதைப் பொருள்கள் அனைத்தையுமே
வென்றி கொள்ளும் தரத்ததன்றோ
    வேகம் நிறைந்த காதல்மது (162)

காதல் வெறியில் தூக்கமின்றிக்
    கன்னி அவள்பால் சென்றுசென்று
மோதும் மனத்தை அடக்குகின்ற
    முறைமை யறியா நிலையினனாய்
சீத உடம்பில் கொதிப்பேற
    சிந்தை யவளை நினைந்தயர
ஏதும் செய்ய யியலானாய்
    இருந்தான் தோப்பில் யூசருகு (163)

கண்கள் தூக்கந் தனைமறப்பக்
    கருத்தைக் காதல் நினைவழுத்த
வண்ண மலர்கள் உமிழ்கின்ற
    வாசம் மூக்கைத் துளைத்தெடுக்க
தண்ணக் கதிரால் வானநிலா
    தழுவி யுடலைச் சுட்டெரிக்க
எண்ண மெல்லாம் உமையிரத்தை
    எண்ணி யெண்ணிக் குமைந்திருக்க! (164)

---

* ஆறுகால்கள்

எந்த வகையில் அடைவதிந்த
எழிலார் மயிலை யெனநினைந்தே
சிந்தை வருந்த யூசருகு
தெளியா மனத்தைப் புயலாக்கி
நொந்தே கிடந்தான் மதியிவனின்
நொம்ப லத்தைக் கண்டிரங்கி
அஞ்சி யோடி மறைந்ததுவே
அவனைத் தூக்கம் தழுவியதே (165)

நறவம் சிந்தும் தோப்பினிலே
நல்ல மலர்ப்பஞ் சணையின்மிசை
1பரவை போன்ற கண்படைத்த
பாவை யர்கள் படுக்கவைக்க
சிரம மின்றித் துயின்றிட்டான்
திசைக ளெங்கும் ஒளிபரவ
இரவின் ஆட்சி யகன்றேக
எழுந்தான் கிழக்கில் சூரியனும் (166)

### எண்சீர்சந்தவிருத்தம்

மாலையிலே மேற்கடலில் படுத்த சூரியன்
மாயமதாய்க் காலையிலே கீழ்க்கடல் தன்னில்
கோலமிகு திரைந்துகிலை விலக்கி மெதுவாய்க்
கோதுறுநற் கதிர்க்கரங்கள் ஊன்றிச் சிவந்த
ஞாலம்புகழ் ஒளிமுகத்தைக் காட்டிச் சிரசை
நன்குயர்த்தி யெழுந்தனனே வனசம் சிரிக்க
ஓலமிட்டே கடலரசி அரற்றி அலற
உவப்புடனே வானமென்னும் பெண்ணாள்தழுவ (167)

வேகமுடன் ஆகாயத்தை எட்டிப் பிடித்தான்
மிகக்கீழே இருந்தவன்பால் பதவி சேர்ந்ததும்
மாகொடூரம் செய்வதுபோல் பரிதி வெயிலை
வையமெங்கும் மிகவிரைந்தே பரப்பிட லானான்
தோகைவிரித் தாடும்மயில் வாழுந் தோப்பினுள்
சூரியனின் கதிரொளிதான் நுழையலா யிற்றே
ஆகமீது வெயில்பரவ யூச ருகுதான்
அரியதுயில் கலைநதெழுந்து நோக்கிட லானான் (168)

---

1 கடல்

முகம்கழுவ ஓரிளம்பெண் பன்னீர் நல்கினாள்
    வேறொருத்தி பல்துலக்கக் குச்சியை யீந்தாள்
அகமகிழக் குளிப்பதற்கு வருக என்றுமே
    அவன்கரத்தைப் பற்றியொரு கன்னி யிழுத்தாள்
புகலரிய அழகுமிளிர் குளிய லறைக்குள்
    பிடித்திழுத்துக் கொண்டவள்தான் சென்றிட லானாள்
தகவுடனே அங்குநின்ற கன்னியர் பல்லோர்
    தக்கபடி அவனைக்குளிப் பாட்டி முடித்தார் (169)

பட்டாடை அணிந்திடற்கீந் திட்டா ளொருத்தி
    பன்னீரிலே குளித்தஉடல் துடைத்தாள் ஒருத்தி
தொட்டுடையை யுடுத்திவிட வந்தாள் ஒருத்தி
    சுடரணிகள் பூட்டிவிட லானாள் ஒருத்தி
எட்டுத்திசை யும்மணக்கும் அத்தர் எடுத்தே
    இன்கரத்தால் இன்னொருத்தி பூசிட லானாள்
மொட்டலர்ந்த மாலைதனைக் கழுத்தில் தரித்தே
    வேறொருத்தி காலிலணி சேர்த்துமே விட்டாள் (170)

மன்மதரே வருகவென ஆரத்தி சுற்றி
    வாழ்த்தொலித்து வெண்சாமரம் கொண்டு வீசியே
அன்னநடைப் பெண்கள்சிலம் பார்த்தே யொலிக்க
    அங்கமதற் கேற்றபடி அபிநயம் செய்ய
பொன்னணிசெய் கூடமொன்றில் யூச ருகினைப்
    பொலிவுறவே கூட்டிச்சென் றமர்ந்திட வைத்தார்
மென்மையுள பஞ்சணைசேர் நாற்கா லிதனில்
    பொருந்தவுடல் யூசருக மர்ந்திட லானான் (171)

வெள்ளியாலே ஆனமேசை தன்னில் உணவை
    விதவிதமாய் பரப்பினார்கள் தங்கத் தட்டிலே
அள்ளியுண்ண மரகதத்தால் ஆன கரண்டி
    அமுதமென அறுசுவைசேர் பதார்த்த வகைகள்
தெள்ளுதமிழ் இனிமையைப்போல் அருகி லிருந்தும்
    தீண்டமனம் நாடவில்லை யூசரு கிற்கு
பள்ளந்தனை நாடியோடும் நீரினைப் போன்றே
    பாய்ந்தேயவன் கண்கள்யுமை யிரத்தைத் தேடின (172)

கண்டுகொண்டார் அவன்நிலையைத் தோழியர் தாமே
காதல்வய மானஅவன் தனக்காய் இரங்கி
விண்டெதுவும் கூறிடாமல் எதிரில் சுவரில்
விளங்கும்நிலைக் கண்ணாடியைப் பார்க்கத் தூண்டினர்
கொண்டலிடை முழுநிலவு தோன்றுதல் போலே
கோதையுமையி ரத்தாள்முகம் தோன்றிய தாங்கே
கண்டஅவன் கண்ணிமைக்க மறந்துமே போனான்
கவிஞனாகி அவள்எழிலைப் பாடிட லானான் (173)

## அறுசீர்ச்சந்தவிருத்தம்

"அமுதம் ஊறும் செவ்விதழே
அரிய ரோஜாப் புதுமலரே
குமுதப் பூவே சந்தனமே
கோவை செய்யா நன்முத்தே
கமுகே கனியே நறுந்தேனே
காதல் பிழம்பே அருகேவா
சமமாய் அமர்வோம் உணவுண்போம்
தனித்தே யிருந்து கதைபடிப்போம்" (174)

என்றே பாடி எழுந்துசென்று
எதிரே யிருந்த கண்ணாடியை
நன்றே தொட்டுப் பற்றினனே
நகையொலி கூடம் நிரப்பியதே
பொன்னார் காதல் வயமானோர்
போக்கிற் கிவனொரு சான்றென்றே
நின்றவோர் தோழி கூறினளே
நெடுஞ்சிரிப் பின்னும் வலுத்ததுவே (175)

தன்னின் தவற்றை யூசருகு
சணத்தில் உணர லாகினனே
முன்னம்..ஆனால் அவன்பார்வை
மேத்தளம் தன்னை நோக்கியதே
அன்னம் என்ன உமையிரத்தாள்
அங்கே நிற்கக் கண்டனனே
உண்டாள் கண்ணால் அவள்இவனை
உண்டான் இவன்அவள் உயர்எழிலை (176)

ஆற்றின் வெள்ளம் தனைஅணையால்
அடக்க வியலும் சிலபோதில்
கூற்றைக் கூட வெல்லுகின்ற
கொடுந்தவத் தோர்கள் உலகிலுண்டாம்
ஏற்ற நல்ல பதவியையும்
இழக்கும் துணிவுஞ் சிலர்க்குண்டு
ஆற்றல் மிகுந்த காதலுக்கே
ஆட்ப டாதார் யாருலகில்? (177)

இளைஞன் அழகன் மனவலிமை
இழக்கா நிலையோன் யூசருகு
கலைஞன் ஞானக் கல்வியிலும்
கரைக டந்த வல்லுனன்காண்
இளைத்தா ளில்லை அவனுக்கவள்
எனினும் பருவம் இருவரையும்
சளைக்கா நிலையில் காதலிலே
தள்ளி வெற்றி கொண்டதுவே! (178)

பார்வை தனிலே இன்பங்கொளும்
பசிய காதல் வயப்பட்டே
சீர்சேர் இளைஞன் யூசருகும்
செல்வி உமையி ரத்தவளும்
ஆர்வ மோடு பார்த்துநிற்கும்
அந்தப் போதில் ஜின்னரசன்
கூர்வாள் துலங்கக் கைதனிலே
கோல மனைவி பின்தொடர (179)

வந்தான் உதயம் ஆகுமுன்னே
மகிழ்வாய் வந்தே தோழியர்தாம்
தந்த நல்ல தகவல்படி
தமது மகளைக் கண்டும்உயிர்
நந்தா திருக்கும் யூசருகை
நயந்தே காண ஜின்னரசன்
இந்த இளைஞன் தன்மகளுக்
கேற்றோன் தானா எனக்காண (180)

மண்டி யெழுந்த ஆசையுடன்
வந்தாள் அரசி அரசனுடன்
தண்டிகை சுமக்கும் சேவகரின்
சந்தக் குரலின் கீதஒலி
பெண்டி ரின்றிப் பிறர்நுழையாப்
புகழ்சேர் கன்னி மாடத்தினுள்
அண்டி நின்ற காவலரின்
அனுமதி யின்றி நுழைந்ததுவே (181)

அரசன் வரவைத் தோழியர்கள்
அறிய லானார் நொடிப் பொழுதில்
பொறியில் இயங்கும் எந்திரம்போல்
புரிந்தார் வினைகள் மிகவிரைந்தே
அரிய தனது பதம்சிவக்க
அறைக்குள் ஓடி உமையிரத்தாள்
உரிய தனது பஞ்சணையில்
ஒன்றும் அறியாள் போல்படுத்தாள் (182)

''மன்னர் இங்கே வருகின்றார்
மதிப்பு மிகுந்த விருந்தினரே
முன்னம் உமது இடத்தினிலே
மேவி அமர்வீர்'', எனஎடுத்துச்
சொன்னார் தோழிப் பெண்களின்னும்
சொன்னார் ''இங்கே நடந்தவற்றை
மன்ன ரிடத்தே யுரைத்தெம்மை
வதைப்பட வைக்கா தீரெ''ன்றே (183)

''மன்னன்'' என்ற சொற்கேட்டு
வருகின் றானோ சுராயிக்கென
எண்ண லானான் யூசருகான்
இங்கே சுராயிக் வந்துவிட்டால்
வண்ண மயிலாள் தனைஅவனே
வலிந்து கொள்வான் தமதுநிலை
என்ன வாகும்? எனநினைத்தே
இதயம் நொந்தான் யூசருகு (148)

வையம் காணாப் பேரழகி
    வாய்ப்பாள் நமக்கென் றேநினைத்தோம்
பொய்யாய், கனவாய் ஆசைதனைப்
    போக்கு தற்கோ சுராயிக்கெனும்
வெய்ய காம வெறியனிங்கே
    மேவு கின்றாள் நம்விதியை
ஐயோ எவர்பால் உரைப்பதென
    அகத்துள் அழுதான் யூசருகு (185)

அஞ்சு கின்றான் யூசருகென்(று)
    அறிந்த தாதிப் பெண்களெங்கள்
''செஞ்சொல் அரசர் மிகநல்லார்
    சீற்ற மென்ப தேயறியார்
மிஞ்சும் எழிலாள் உமையிரந்தை
    விரும்பு கின்றீர் எனஅறிந்து
நெஞ்ச மகிழ்வோ டுமைக்காணும்
    நினைப்பில் இங்கு வருகின்றார் (186)

தெம்பாய் தெளிவாய் மாப்பிளையாத்
    திடமாய் பொலிவாய் இருப்பீ''ரென
அம்பொற் பதித்த ஆசனத்தே
    அமர்த்தி பயத்தால் துளிர்த்திட்ட
உம்பர் முகத்து வியர்வைதனை
    உலர்ந்த பட்டால் துடைத்தபடி
செம்ம லர்க்கைச் சாமரத்தால்
    தென்றல் தோன்ற வீசினரே (187)

கன்னி மாட வாயிலினைக்
    கடந்து மனைவி பின்தொடர
மன்னு மரசன் கால்நடையாய்
    வந்தான் தனது பரிவாரம்
என்னும் கூட்டம் மதிள்சுவருக்[கு]
    அப்பால் நிற்க எழில்நிறைந்த
பொன்னார் சோலை மலருகுக்கப்
    பொதும்ப ரிடையே குயிலிசைப்ப (188)

ஆடும் மயில்கள் அரசிநல
அழகு கண்டு நாணிநிற்க
கூடு மாநம் மகள்தனக்கும்
குமர னுக்குந் திருமணமென்(று)
ஓடும் எண்ணப் பளுவழுத்த
யூசரு கென்னும் காளையுள
கூடம் அடைந்தான் மன்னவனும்
கூட அடைந்தாள் அரசியுமே (189)

களங்கம் இல்லா முழுமதியா
காலை உதிக்கும் சூரியனா
நிலமிது நாள்வரை கண்டறியா
நித்திலம் இளைஞன் ஆனதுவா
வலிமை மிக்க இளஞ்சிங்கம்
வந்துநம் எதிரில் உள்ளதுவா
முழங்கு கடல்சூழ் இவ்வுலகம்
முற்றும் சென்று தேடிடினும் (190)

யாரே கிடைப்பார் இவனைப்போல்
எவரே இவனுக் கிணையாவார்
கூற வொண்ணா அழகுநலம்
கொண்ட இவனே நம்மகளை
ஆரம் சூடி மணம்புரிய
அருகன் என்று மதித்தவனாய்
ஈரம் தோய்ந்த நினைப்புடனே
எழில்சேர் தனது விழிகளினால் (191)

மன்னன் அரசி தனைப்பார்த்தான்
மகளை மணக்கும் வாலிபனை
தன்னை மறந்தே பார்த்துநின்றாள்
தகைசால் அரசி இமையாளாய்
மன்னர் இவரா நாம்தவறாய்
வருவான் சுறாயிக் கெனநினைத்தோம்
என்னே நமது பிள்ளைமதி
என்றே நினைத்த யூசருகு (192)

ஜின்கள் நாட்டு வேந்தனுக்குச்
சிரம்பணிந் தெழுந்து பணிவுடனே
பண்ணார் சொல்லில இசைக்குரலில்
பதமாய் முறையாய் சலாமுரைத்தான்
அன்னோன் அழகை அவனுடைய
அரிய சலாமும் நற்பணிவும்
இன்னும் அதிகம் ஆக்கியதே
இசைச்சொல் அரசை மயக்கியதே (193)

அழகா லின்றிக் குணத்தாலும்
அணிசெய் இனிய பண்பாலும்
பழரசம் ஒத்த இசைக்குரலில்
பகரும் வசியச் சொல்லாலும்
கழலடி பற்றி இவன்தனக்கே
கால மெல்லாம் தொண்டுசெய்யத்
தழைக்கும் அன்பால் என்மகளை
தருவேன் மணக்க சபைகாண (194)

ஏடி யிதற்கு நீயென்ன
இயம்பு கின்றாய் என்பதுபோல்
நீடு விழியில் கேள்வியெழ
நிமிர்ந்து பார்த்தான் அரசிதனை
கோடும் இமைகள் மூடாமல்
கொண்ட பார்வை மாறாமல்
நாடும் அவள்தன் மருமகனாய்
நன்கேற் றுள்ளாள் அவனையென (195)

அறிந்து மகிழ்ந்து யூசருகின்
அருகில் சென்று கரம்பற்றி
செறிந்த அன்போ டுடனமர்ந்து
சிறக்கப் பேசி உணவருந்தி
உறையும் ஊர்பேர் கேட்டறிந்தான்
உற்றார் பெற்றோர் மணவிவரம்
முறையாய் உசாவித் தெரிந்துகொண்டு
மிக்க மகிழ்ச்சி அடைந்தனனே (196)

இதன்பின் எட்ட விலகிநின்றே
 இளவல் அழகை பார்த்துநின்ற
மதர்விழித் தோழிப் பெண்கள்தமை
 வட மின் என்றே அருகழைத்து
முதலில் இந்த வாலிபரை
 மேவ நமது விருந்தில்லம்
அதனில் தங்கி ஓய்வெடுக்க
 அழைத்துச் செல்க எனஉரைத்தான் (197)

பசித்தோன் உண்ணும் உணவுதனைப்
 பறித்தல் போன்ற அவ்வுரையைப்
புசித்த தோழிப் பெண்களெல்லாம்
 பொருமலானார் யூசருகை
ஒசித்த தமது பார்வையினால்
 உண்ணும் வாய்ப்புப் போவதினால்
விசித்தார் மனத்துள் மன்னனுரை
 விழுந்த செவியை நொந்துகொண்டார் (198)

எனினும் வேந்தன் கட்டளையை
 ஏற்றுச் செயலில் யீடுபட்டார்
நனிசேர் அரசன் சொல்லேற்று
 நடக்க வெழுந்தான் யூசருகு
புனித இளைஞன் முன்னடக்கப்
 பிறைநுதல் பெண்கள் உடன்நடக்க
அணிசெய் விருந்து மாளிகையை
 அடைந்தான் ஆங்குளார் வரவேற்றார் (199)

''மன்னன் தந்த கட்டளையை
 வகுக்க லானார் தோழியர்கள்
முன்ன மேயாம் அதை அறிவோம்
 மேவி வந்த சேடியரே
அன்னம் நேர்நம் இளவரசிக்(கு)
 ஆன இவருக் குகந்தவெலாம்
சின்ன நுதலீர் நீங்கள்செய்ய
 தேச மாள்வோர் ஆணை''யென (200)

சொல்ல லானார் ஆங்கிருந்தோர்
தோழி யர்கள் மட்டுமல்ல
வல்ல அமைச்சன் யூசருகும்
மகிழ்ந்தான் அவர்தம் உரைகேட்டு
இல்லத் தரசி யோடரசன்
இருந்து மகளின் மனமறிந்தான்
எல்லை கடந்து சபாநாட்டை
ஏகி அங்கு துல்லியமாய் (201)

யூசரு கென்பான் யாரவனின்
உளப்பாங் கென்ன நிலைமையென்ன?
ஆசையோ டிவனை மணந்துகொண்ட
அணங்கெவ ரேனும் உண்டாயினும்
தேசு நிறைந்த யூசருகின்
திறமை என்ன பதவியென்ன
வீசு வலைபோல் விரிவாக
விவரம் அறிந்து வருகவென (202)

ஆரால் போன்று நுழைகின்ற
ஆற்றல் நிறைந்த ஒற்றர்களில்
வீரம் மிக்கோன் தனையழைத்து
விவரம் கூறி விரைந்துசெலச்
சீரார் அரசன் செப்பினனே
செல்வ மகளை ஒருவனுக்குத்
தார மாக ஆக்குமுன்னம்
சரியாய் அறிதல் கடனன்றோ (203)

கலிநிலைத்துறை

ஜின்னர சனுப்பிய தூதுவன் சபாநகர் சென்று
அன்னக ருறைந்திடும் மாந்தரை அன்புடன் அணுகி
''இன்னக ரிதனில் யூசரு கென்னு நல் விளைஞன்
உன்னத அழகன் உயர்நனிக் குணத்தன் ஒருவன் (204)

நன்மைக ளனைத்தும் தன்பால் கொண்டவன் நல்லான்
என்பையும் பிறருக் கீந்திடும் தன்மையன் இனியன்
வன்மை செய்திட எண்ணிட அஞ்சிடும் மனத்தான்
அன்ன வன்தனை அறிந்தவர் உண்டுமா ஐயா'' (205)

என்று கேட்டனன் எதிர்ந்தவர் இடமெலாம் இதவாய் !
''இன்றின் நகரின் அமைச்ச ரன்றிநீ ருரைக்கும்
வென்றி கொள்தரத் தவர்வே றிலை''யென விளக்கி
ஒன்றிய சொல்லில் ஊரவர் அனைவரும் உரைத்தார் (206)

''மன்னன் சுறாயிக் மாபெருந் தீங்கினன் மணிசேர்
கன்னல் தன்னினும் இனியவன் யூசரு கென்பான்''
அன்ன வன்னிங் கமைச்ச னாயுள அறத்தால்
இன்னல் தந்திடும் அரசையும் ஏற்றனம்'' என்றார் (207)

''மணமுடித் துள்ளனா? எனத்தூ துவனுரை விரிக்க
''பணத்துடன் பெண்ணும் தருவதாய்ப் புகன்றனர் பல்லோர்
இணங்கி யீங்குள பெண்களில் யாரையும் ஏற்று
மணம்மு டித்திட விரும்பிலன்'' என்னவும் வகுத்தார் (208)

''தாயிலை தந்தை தானிலை யில்லையோ தாரம்
தீய செயலிலை தீயவை எதனையும் தீண்டான்
சீயம் தன்னினும் தீரம் தன்னில் சிறந்தோன்
ஆய அன்பினன் அறிஞரில் அறிஞன் அறத்தான்'' (209)

என்னும் சொல்லெவர் வாயினும் எழுந்திட ஏற்றான்
மன்னு புகழுடை வாலிபன் வாய்மையை வகுக்க
துன்னு மனத்துடன் தன்னா டடைந்தஅத் தூதன்
சொன்னான் மன்னவன் அறிந்திட, அறிந்தவை தொகுத்தே (210)

கேட்ட ஜின்னர சானவன் ஒளிதரக் கிளர்த்தும்
வாட்ட டக்கண் வாய்த்த தன்னரும் மகளைக்
கோட்ட மின்றியூ சருகெனுங் காளைக்குக் கொடுக்கத்
தேட்ட மாகினன் செயல்பட விழைந்தனன் சிறக்க (211)

எல்லை யிலாமகிழ் வெழுந்திட எழுந்தநல் லரசன்
ஒல்லை யில்புகழ் அமைச்சனை அருகினில் அழைத்து
''வல்ல பேரெழில் வாய்த்தஎன் மகளுக்கும் வலிய
எல்லை யுள்வந் திருந்திடும் யூசரு கினுக்கும்'' (212)

இன்ன நாளினில் இனியநல் திருமணம் என்னும்
நன்ன யம்மிகு செய்தியை நமதரும் நாடு
தன்னி லுள்ளவர் யாவரும் தெரிந்திடத் தெளிவாய்
சொன்ன யம்முள சொல்லினன் பாலிதைச் சொல்லி (213)

மண்ணி லுள்ளவர் வியந்திட நம்மவர் மகிழ
விண்ண திர்ந்திட முரசறைத் தியம்பிட விடுமின்
வண்ண வேலைசெய் பவர்தமை யும்வர வழைமின்
பண்ணி சைப்பவர் பாவலர் தமக்கெலாம் பகர்மின் (214)

பகரும் ஊரவர் தமக்கெலாம் அரண்மனை படைக்கும்
நிகரில் உணவுடை நித்தமும் உண்டென நிகழ்த்தி
நகர வீதிகள் எங்ஙணும் காவணம் நடவும்
சிகர மீதெலாம் ஒளிவிளக் கிலங்கவும் செய்மின் (215)

இற்றை நாள்முதல் இனிநாம் எடுத்துமே லியம்பும்
அற்றை நாள்வரை எவர்மனை தன்னிலும் அடுப்புப்
பற்ற வைத்திடப் படாதெனும் எம்முரை பகர்மின்
உற்றே யாவரும் திருமணப் பணிசெய உரைமின்'' (216)

என்று செப்பிய அரசுரை தமையமச் செடுத்து
நன்று கூறிடும் நாவினன் தம்மிடம் நவில
குன்று போல்கூன் முதுகுள ஒட்டகம் கொணர்ந்து
வென்றி மாமுர சேற்றிய றைந்தியம் பினனே (217)

கேட்ட ஜின்னினம் யாவும் மகிழ்ந்தன கிளர்த்தே
பாட்டி சைத்தன பாங்குடன் ஆடின பரிவாய்
கூட்ட மிட்டன கோதைதம் திருமணம் கூறி
ஏட்டி லிலாவகை எழில்பு துக்கின எங்கும (218)

அணிகள் செய்தன, ஆடைகள் செய்தன அனைத்தும்
தணிவி லாதுயர் தரத்தில் அமைந்திடத் தமது
பணியைக் கவனமாய் செய்தன விழிப்புடன் பார்த்து
கணித்து ரைக்கொணாக் காரியம் செய்தன கடிதில் (219)

எங்கும் மணவிழா என்பதாய் நகரினை இனிதாய்ப்
பொங்கும் பேரெழில் பூத்திடச் செய்தன பொலிவாய்
தங்க மாமணி தாங்கிய காவணம், தரளம்
தொங்கும் தோரண வாயிலும் சொலித்தன சுடரால் (220)

### எண்சீர்சந்தவிருத்தம்

பலமலர்கள் பூத்தபுதுப் பொழிலைப் போன்றும்
மதுமலர் நிறைந்தஎழில் தடாகம் போன்றும்
நிலவொடுதா ரகைகள்நிறை வானம் போன்றும்
நெடுவீதி எங்கணும்மே மேன்மை ஓங்க
கலைபூத்த காவணத்தின் விதானம் தன்னை
கவினுறவே செயஎண்ணி கைவி னைஞர்
விலைமதிப்பிற் கடங்காத மணிகள் கொண்டு
மிகுத்தொளிரும் விதத்தினிலே அழகு செய்தார் (221)

பலகனிகள் பழுத்தநறுஞ் சோலையொப்ப
பந்தலிரு மருங்கினையும் அமைத்திட் டார்கள்
அழகுநிறை சித்திரங்கள் வரையப் பெற்ற
அரியபெருங் கம்பங்கள் தரையி லிட்டார்
குலைசாய்ந்த வாழைமரம் வாயில் தோறும்,
கோதறுவா சனைப்பொருள்கள் எவ்வி டத்தும்
அலைபாயும் கடலைப்போல் மக்கள் வெள்ளம்,
அனைவருக்கும் உயர்உணவோ டுறங்கு தற்கு (222)

பஞ்சணைகள் விரித்திருக்கும் நெடிய கூடம்
பரிவுடனே உபசரிக்கச் சார ணர்கள்
செஞ்சொல்உரைப் பெரியோரின் வரவேற் புக்கள்
சிறுவர்களின் குற்றேவல் சீர்மைத் தொண்டு
விஞ்சையரின் இசைவிருந்து வீதி தோறும்
மேவியெழும் பல்லியத்தி னார்ப்பி னூடே
அஞ்சுகமாம் உமையிரத்தை மணப்ப தற்காய்
அரியஎழில் யூசருகு பவனி போந்தான் (223)

கொண்டலிடைப் பூத்தெழுந்த மதியம் போன்ற
குளிர்முகத்தான் யூசருகின் பவனி தன்னைக்
கண்டவர்கள் இவனழகே அழகென் றார்கள்
காளையிவன் மானுடனா? என்றுங் கேட்டார்
கண்டுநிகர் மொழியுடைய உமையி ரத்தாள்
காத்திருந்த தொன்றும்வீண் போக வில்லை
அண்டரினும் மேலான அழகு நல்லான்
அவனியிலே இவளுக்காய்ப் பிறந்தா னென்றார் (224)

புரவிமிசை நிலவொன்று போகு தென்பார்
    பொங்குகடல் நித்திலத்தின் வடிவீ தென்பார்
திரண்டெழுந்த புண்ணியத்தின் உருவம் ஈதோ
    சித்திரத்தில் உயிர்புகுத்தி விட்டார் தாமோ?
இரவிஇவ னாகியிங்கு வந்த தோநல்
    லெழிலெல்லாம் ஒருங்கிணைந்தே இவனா யிற்றோ?
தரத்திலுயர் தங்கமிவன் மேனி கண்டே
    தரையினடிப் புறத்தோடி ஒளிந்த தென்பார் (225)

ஆடைஎழில் தனைநோக்கி வியப்பார் சில்லோர்
    அணிமணியின் ஒளிகண்டு மலைப்பார் சில்லோர்
ஈடிணைதான் இவனுக்கிலை என்பார் சில்லோர்
    இவன்அவளுக் கேற்றவனே என்பார் சில்லோர்
மாடிமிசை மருங்கின்மிசை வீடு தோறும்
    மருக்கமழும் மலர்தூவி நிற்பார் சில்லோர்
நாடிநம துமையிரத்தை மணக்க வந்த
    நம்பியிவன் வாழ்கவென உரைப்பார் சில்லோர் (226)

இவ்வாறாய் மக்களெல்லாம் மகிழ்ந்து ரைக்க
    இனிதாக யூசருகு பவனி வந்தான்
அவ்வேளை அரண்மனையில் உமையி ரத்தை
    அவளுடைய தோழியரும் உற்றோ ரும்மாய்
செவ்வியுற அலங்கரிக்க எண்ண மிட்டார்
    செழுமணத்துப் பன்னீரில் குளிக்க வைத்தார்
எவ்விடத்தும் கிட்டாத ஆடை ஆங்கே
    எண்ணரிய பலவண்ணத் திருந்தும் கூட (227)

நெருப்பாலே ஆனஉமையி ரத்தாள் தன்னை
    நிலவொளிபோல் இலங்குமுயர் ஆடை கொண்டு
திருப்போலே அலங்கரித்தார் மரக தத்தால்
    செய்தஉயர் ஆசனத்தே அமர வைத்து!
இருப்பதிலே மிகச்சிறந்த அணிக லன்கள்
    எடுத்தவளின் நிறம்பொருந்த அணிவித் தாரே
இருட்டறையை ஒளியாக்கும் அவளு டம்பிற்[கு]
    இனித்தேவை இல்லைஅலங் கார மென்று (228)

பூச்சூடி மையெழுதி புருவ வில்லைப்
பொலிவாக்கிக் கண்ணம்மைக் காணும் போதே
பேச்சின்றி யூசருகு சரண டையும்
பெற்றியதாய்ச் சுருமாவைப் பொருந்தத் தீட்டி
மூச்சுகுத்துப் பெண்களும்மே பார்த்து வக்கும்
மின்னற்கொடி உமையிரத்தை அன்னம் போன்றே
ஏச்சறியாத் தோழியர்கள் மகிழ்ச்சி மேவ
இட்டுவந்தார் வாழ்த்தொலித்து மணமே டைக்கு (229)

தங்கத்நால் மதிளமைந்த அரண்ம னைக்குள்
தரளத்தால் அமைந்துள்ள மேடை யின்மேல்
மங்காத மரகதத்தால் விதான மிட்டு
வைரத்தால் கால்நட்டு மாணிக் கத்தால்
பொங்குமெழில் தோரணங்கள் வதியச் செய்து
போதுகளாய் நீலமணி பொதித்தி லங்கும்
மங்களமா மேடைமிசை மதியோ டிரவி
வந்ததென மணமக்கள் வந்த மர்ந்தார் (230)

கலி விருத்தம்

மறைவல் லுனரும் மதிவல் லுனரும்
நிறையுஞ் சபையில் நியாகி வழுவா
முறையில் பெரியோர் சரியாய் நெறியாய்
உறுநிக் *காஹ்வை உயர்வாய் முடித்தார் (231)

''கடலும் நிலவும் மலையும் கதிரும்
உடுவும் உயர்வான் உளநாள் வரையில்
கடிமா மலரும் மணமும் எனவே
நெடுநாள் உலகில் நிலையாய்ப் பொலிவாய் (232)

தகவோர் உறவும் தருமா மனமும்
புகழிற் குரிய மகவும் மனையும்
சுகமும் பெறுக'' எனநல் லோர்கள்
புகன்றார் இறையைத் துதித்தே வாழ்த்து. (233)

மகளிர் வாழ்த்தும் மறையோர் வாழ்த்தும்
பகரற் கரிய பண்புளோர் வாழ்த்தும்
இகமறி கவிஞர் இன்னுரை வாழ்த்தும்
மகிழப் பெற்ற மணத்தம் பதிகள் (234)

---

* நிக்காஹ் - திருமணம் அரபிச்சொல்

தோழியர் சூழச் சுகந்தம் சூழ
வேழமும் பிடியும் எனநன் கிணைந்து
தாழா இன்பம் தகவுடன் காணச்
சூழும் நினைவுடன் சேர்ந்தனர் மணவறை (235)

அரசனும் அரசியும் மகிழ்வில் திளைத்திட
புறமுள யாவரும் பூரிப் படைந்திட
தருமுயர் இன்பம் தந்தும் பெற்றும்
திருமணத் தம்பதி நலத்தில் தோய்ந்தார் (236)

காலம் நடந்தது யூசரு கானவன்
கோல ஜின்னெடுத் தேகிக் கொணர
காலையில் சபாநா டடைந்தங் கிருந்து
மாலையில் ஜின்நா டடைவான் மகிழ்வாய் (237)

ஜின்நா டடைந்ததை திருமணம் நடந்ததை
தன்னை யன்றி நண்பனும் அறியாத்
தன்மையில் காத்தான் தனது மன்னனை
எண்ணி அஞ்சி இதயம் நொந்து (238)

பதவியைக் காத்தான் பழுதறு செயலால்
இதந்தரும் மனைவியோ டினிதாய் வாழ்ந்தான்
அதிமது ரச்சொல் உமையி ரத்தாள்
மதிமுக எழிலுரு யூசரு குடனே (239)

குயிலும் குரலும் எனுமாப் போன்றும்
மயிலும் சாயலும் ஆன தன்மையில்
நயமொழி புகன்றும் இனிதுற நடந்தும்
மயல்தரு பெண்ணினம் முழுமையும் வியக்க (240)

இருவர் என்னும் எண்ணம் இழந்து
திருவுடைக் கணவன் தானும் தானும்
ஒருமனப் பட்ட அன்பில் கலந்து
மறுவறு வாழ்வு வாழ்ந்தாள் உயர்வாய் (241)

திருமண மாகியோ ராண்டு தீருமுன்
அருமன உமையிரத் தடைந்தனள் கர்ப்பம்
நறுமன யூசரு கென்னும் நம்பியின்
தருமனம் இன்பமே தாங்கித் தழைத்தது (242)

இன்பமே கொண்டனர் கேட்ட வளவரும்
இன்பினி லாழ்ந்தனர் அரசி யரசனும்
இன்ப விழாஜின் நாட்டிடை வீறுடன்
துன்னி எழுந்தது தூய தன்மையில் (243)

அரண்மனை தன்னிலே அன்ன மளிப்புடன்
பெரும்பணம் அணிமணி பிறவும் பெட்புற
வருந்தி யழைத்து வாரி வழங்கினர்
பெறுபவர் எவர்க்கும் பேத மின்றி (244)

கீத ஒலிப்புகள் கிளர்வெடி யோசைகள்
வேத முழக்குகள் வித்தகர் பேச்சொலி
போதம் பிறங்கொலி பெண்களின் வாழ்த்தொலி
நாத நயப்பொலி நாடெலாம் ஆர்த்தவே. (245)

ஏழு திங்களில் எழுந்த விழாஒலி
தாழா தையிரு திங்கள் நிறைந்து
ஞாலம் வியந்திட நாயன் அருளிய
சீல மகப்பே றுறும்வரை நீண்டது (246)

உமையிரத் தென்னுநல் லுத்தமப் பெண்கொடி
இமையவர் நாட்டுறும் ஏந்திழை தம்மிலும்
கமைதரு சிசுவெனக் காண்பவர் கூறுமா[று]
அமைவுரு மகவீந் தகமகிழ் வுற்றனள் (247)

மதியின் குஞ்செசன மாமயில் பேடென
புதிய சூரியப் பிஞ்செசன மின்னென
விதியவ னித்திரு மகவினை யீந்ததாய்
அதிசயித் துரைத்தனர் பார்த்தவர் யாவரும். (248)

பிறந்த தினவிழா பிறங்கிற் றூரெலாம்
சிறந்த கவிஞர்தம் சீர்தவழ் வாழ்த்துகள்
அருந்த வத்தினர் அன்புள ஆசிகள்
பொருந்த வழங்கினர் புகழ்பட நாளெலாம் (249)

### எண்சீர் சந்தவிருத்தம்

''பஞ்ச வருணக் கிளியென் பெனோ, எழில்
படரும் வானச் சுடரென் பெனோ,யென்
நெஞ்சப் பூட்டை நெகிழ்த்துநல் லின்பினை
நிரப்பும் பனிமலை முகடென் பெனோ''கறை
கொஞ்சம் ேமனு மேயிலா மாமதிக்
குஞ்சென் றேஉரை கூறிட ஒண்ணுமோ
ஒஞ்சி டாதிறை யாக்கிய அழகெலாம்
ஒருருக் கொண்டு பிறந்தஇப் பிள்ளையை' (250)

என்று கூறி இதயத் தாமரை
ஏற்ற பூரிப்பில் இன்பத்தேன் சிந்திட
பொன்றிலா ஆனந்தப் பொய்கையில் ஆடினான்
போதம் மிகுத்த யூசரு கென்பவன்
குன்ற முகிலினைக் கண்ட மயிலெனக்
குதூக லித்தனள் உமையிரத் தென்னுமான்
ஒன்றி யிருவரும் பிள்ளையை அன்பெனும்
ஓயா முத்த மாரியுள் ளாக்கினர் (251)

தமரினை யொத்த அரண்மனைத் தாதியர்
சார்ந்த சேவகர் மற்றுள யாவரும்
அமுதினைத் தேன்தனை அருங்கனிச் சாற்றினை
அருந்தியோர் போல்மனக் களிப்பி லழுந்தினர்
இமயவர் வாழும் எழில்திரு நாடென
எங்கும் குதூகலம் எம்பிக் குதித்ததே
அமைதி யோடிவை மத்தியில் ஜின்களின்
அரசன் 'பேத்தி'க்குப் பெயரினைத் தேடினான் (252)

தனக்குத் தெரிந்தநற் பெயரெலாம் தன்னுளம்
சாற்ற அவைகளைத் தக்க முறையிலே
நினைத்துப் பார்த்தும் நிகரிலா அழகிய
நித்திலப் பிள்ளைக்குப் பொருந்தி வராதினால்
மனத்தில் ஏற்க மறுத்தம் மன்னவன்
மதியுடைக் கல்வி மான்களை நாடினான்
''இனத்தி லுள்ள இணையிலாச் செல்வம்நேர்
ஏந்த லாரிகளே இவ்வரும் பிள்ளைதம் (253)

அழகு பொறுமை அமைதி பிறவுமாய்
அமைந்த சிறப்பெலாம் பிறங்கிடும் தன்மையில்
எழிலுறும் பெயரொன் றியம்பிட உம்மிடம்
இறைஞ்சி னேன்விரைந் துரையுமென் றியம்பினான்
அழியாக் கல்வியில் தோய்ந்த மனத்தவர்
அரிய சரித்திரப் பெயரெலாம் கூறினர்
செழிய மன்னவன் செவிக்கது இன்பமாய்த்
தெரிந்தில ஆதலால் ஏற்றிலன்; நூலவர் (254)

சரித்திரம் தன்னை விலக்கி இலக்கியம்
சாற்றும் பெயர்களை விண்டனர் அன்னவர்
உரைத்தஅப் பெயரெலாம் எளிமையாய் இலையென
ஒதுக்கியே ஜின்னர சானவன் கூறினான்
''பொருத்த மாகிய பெயரொன் றுரைத்திடில்
பொற்குவை யீகுவேன் போதத் துறையினீர்
கருத்துடன் சிந்தியும்'' என்றதும் கற்றவர்
கருத்தும் கண்ணும் திறந்தன செவ்வையாய் (255)

''பிள்ளையின் தந்தையூர் 'சபா'அந் நாட்டுறும்
பீடுறும் மலர்ப்பெயர் பல்கீஸ் ஆனதால்
கொள்ளை வனப்புள பிள்ளைக்(கு) அப்பெயர்
சூட்டுதல் பொருத்தமே கொள்ளும்'' என்றனர்
விள்ளரும் மேலவர் விளம்பிய பெயர்ஜின்
வேந்தனின் மனத்தினை மிகவும் கவர்ந்ததால்
அள்ளியே நன்நிதி அளித்தம் மகவிற்[கு]
அப்பெயர் இட்டிட அரசன் வேண்டினான் (256)

ஆயிரம் மேலவர் நாவுகள் ஆர்த்தன
ஆயிரம் கல்விமான் செந்நா ஆர்த்தன
ஆயிரம் ஆயிரம் மக்களின் நாவுகள்
ஆர்த்தன பல்கீஸ் என்னுமந் நாமத்தை
தோயும் மலருடன் பொன்னையும் தூவியே
சொன்னான் அரசியப் பெயரினைத் துலக்கமாய்
தாயும் தந்தையும் தம்மகள் நற்பெயர்
சாற்றி மகிழ்ந்தனர் தரையெலாம் போற்றவே (257)

தாதியர் பிள்ளையைத் தாங்கி யெடுத்துமே
தரள மணியுள ஊஞ்சலி லிட்டனர்
''வேதம் உரைத்திடும் மேன்மைகள் யாவுமே
மேவுக என்றிசைப் பாட்டிசைத் தாட்டினர்
போதம் மிகுந்த பிள்ளையின் ஊஞ்சலை
போந்துதம் கையினால் ஆட்டிட எண்ணியே
பாதம் தரையிடைப் பட்டிடா உமையிரத்து
பாசம் மேலிட எழுந்து நடந்தனள் (258)

ஆசைக் கால்களை விரைந்து நடத்திட
ஆண்டவன் ஏவல் அதனினும் முந்திட
வீசு தென்றல் வேகமே கூட்டிட
மெலிந்த உடல்மிகத் தளர்வினைத் தந்திட
மாசு மறுவிலா உமையிரத் தானவள்
மயங்கி விழுந்திட மார்படி பட்டிட
ஓசைப் படாமலே மறலி வந்திட
உயிரும் பிரிந்திட உடல்தரை யுற்றதே (259)

வேறுநடை

உமையிரத்தாள் இறந்தாளெனும் ஒலம்ஜின் நாட்டின்
ஒவ்வொருவர் காதினிலும் பட்டுருவி நெஞ்சைக்
குமைத்தெடுக்க வாய்விட்ட முதரற்றி நொந்து
கூடினரே அரண்மனையின் முன்புகடல் போன்றே
சமைந்தபெருங் கல்லெனவே வேந்தன்வீற் றிருக்க
தனைமறந்த நிலையினிலே அரசிதரை கிடக்க
இமைதிறந்து விழிதிறந்து இதழ்திறந்து குழந்தை
எதைக்கண்டோ சிரித்தபடி தொட்டிலிலே கிடக்க (260)

விழாக்கோலம் பூண்டிருந்த ஜின்னரசன் நாட்டில்
வீதிதொறும் வீடுதொறும் துக்கநிழல் படிய
அழகிழந்து பொலிவிழந்து துயரம்அர சோச்ச
ஆருயிரை யாவருமே இழந்தநிலைக் கானார்
எழிலிசைமு ழக்கெல்லாம் இற்றொழிந்து போக
எங்ஙணுமே சோகஇசை வீறுகொண்டு நிற்க
அழல்பற்றி எரியும்ஒரு வீடாக நாடே
ஆனதுவே உமையிரத்தாள் இறந்துபட்ட தாலே (261)

யூசருகு இலையுதிர்ந்த நெடுமரமாய் ஆனான்
இருவிழியும் குற்றால அருவியெனக் கொண்டான்
பாசமிகு மகவுதனை நோக்கிடுவான் தன்னைப்
பாராமல் கிடக்கின்ற உமையிரத்தைப் பார்ப்பான்
வீசுதென்றல் புயலாக மாறிடுமோ கணத்தில்?
விழுங்கையிலே கற்கண்டு வேம்பாகிப் போமோ?
நாசமிது போலுண்டோ, என்மகளே உன்னை
நானெவ்வி தம்வளர்ப்பேன்? எனவெடுத்த ணைப்பான்
(263)

இறந்துபட்ட உமையிரத்தை அடக்குவதற் காக
எடுத்தேகும் கடல்போன்ற மக்களிடை மேவி
மறந்தென்னை விட்டேநீ செல்லுவதோ உன்னை
மறந்துநான் இவ்வுலகில் எவ்வாறு வாழ்வேன்?
சிறந்தயிந்த மகவுதனை எவ்விதம்வ ளர்ப்பேன்?
சீர்த்திமிகும் பெண்கொடியே ஈதறமோ என்றே
அறிவார்ந்த யூசருகான் அழுதாற்றி நொந்தான்
அறவாளர் அவன்நிலையை மாற்றமுயன் றிட்டார் (263)

மண்ணிலிட்ட போதந்த மண்ணினோடு மண்ணாய்
மடிந்திடவே யூசருகு மனத்துணிவு கொண்டான்
எண்ணரிய நீதிகளைக் கற்றறிந்த அவன்தன்
இடர்ப்பாட்டைக் கண்டவர்கள் "கற்றறிந்த ஞானம்
திண்ணியனாய் மானுடனை ஆக்கல்அரி தென்னும்
சிந்திப்பை இவன்நிலைமை காட்டிடுதே" என்பார்
"பெண்மைநலம் மானிடனைப் பேதலிக்கச் செய்யு
பெற்றியதாம் என்பதையும் கண்டோம்இன் றென்பார்
(264)

மகளுக்காய் இறந்திட்டாள் அரசியந்தப் போதே
மன்னவனும் படுக்கையிலே வீழ்ந்திட்டான் அன்றே
அகம்நொந்து உடல்தேய்ந்த யூசருகு பெற்ற
அருமகவை வளர்ப்பதற்காய் வாழ்ந்திட்டான் உலகில்
சிகையழகும் முகஅழகும் தேகத்தின் அழகும்
தினம்வளர வளர்ந்திட்டாள் பல்கீசுக் கன்னி
தகவுடைய தாய்அழகும் தந்தையின்நல் லழகும்
தனியவன்தான் தனியாகத் தந்தஉயர் அழகும் (265)

பொலிவுதர ஆசிரியர் போதம்தர கிளிகள்
பேச்சுந்தரக் குயிலுக்குநல் லிசைதந்தாள் நன்கு
நிலவுவந்தே முகம்பார்க்கும் கண்ணாடி வதனம்
நீள்உடுக்கள் நாணுகின்ற பல்லழகுச் செல்வி
விலையுயர்ந்த வைரம்போல் ஒளிபடைத்த கண்ணாள்
வீசுகின்ற இளந்தென்றல் போல்நடக்கும் பாவை
அலைகளெனக் கூந்தலுள்ள அன்புருவ அன்னம்
அமருலகப் பெண்ணொத்த பல்கீசுப் பெண்ணாள்! (266)

## சந்தக் கலி விருத்தம்

தானா தன தானா தன
தானா தன தானா

பொன்னோ புதுப்பூவோ நவம்பேணும் மணிப்பொலிவோ?
மின்னோ பதினாலாந்தின மீதேயெழு நிலவோ
துன்னு மயிலாமோ கலைதானோ குயில்பேடோ?
என்னேயிவ ளின்பேரழ கென்றேயுல குரைக்க (267)

குன்றாஅறி வோடும்நயங் கூடுமழ கோடும்
பொன்றாஅறத் தோடும்நலம் போற்றுமனத் தோடும்
நன்றேபுகல் பல்கீசெனும் நங்கைசெழிப் போடு
மன்றல்மணம் காணும்வய தானாள்உயர் வானாள் (268)

தன்நேரிலா பல்கீசினை தாரம்எனக் கொள்ள
வந்தார்பல மாவீரரும் மாமேதையு மானோர்
அன்னார்தமை பெண்ணாள்மன மொவ்வாததி னாலே
அன்னாளருந் தந்தைமனம் நொந்தான்உடல் வெந்தான் (269)

இன்னாளினில் பல்கீசெ னும்நன்மாமணிப் பெண்ணாள்
"என்னாருயிர் தந்தாயென துள்ளத்தொரு ஆசை
பன்னாளுள" தென்றாளவள்! சொல்லென்றனன், தாதை
தன்வாசகம் கேட்டேமனத் துள்வாசகஞ் சொல்வாள் (270)

"நும்மூரினை நான்காணவும் நும்மோர்களை யெல்லாம்
எம்மோரென யான்பேணவும் எண்ணம்மிகக் கொண்டேன்
அம்மாநினை வென்நெஞ்சினில் ஆறாய்க்கட லாக
வம்பாயெழ நான்மூழ்கிடர் வாதைப்பட லானேன் (271)

மூனும்மன ஆசைதனை நானும்மிடஞ் சொல்ல
நாளும்நினை வாவேனதை நாவோசொல வொட்டாத்
தாழாநினை வாலேயினித் தாங்காதெனக் கண்டேன்
ஞாலம்புகழ் தந்தாயெனக் காருன்றனை யல்லால்? (272)

தாயாரிலை இவ்வூரினைத் தாண்டிப்பிரி தெங்கும்
சேயாகிய நான்சென்றது மில்லையத னாலே
ஓயாதென துள்ளமுன தூர்சென்ற தைக்காண
மாயாநினை வாலேஅன லாகுந்துயர் தீர்ப்பாய்'' (273)

என்றேமிக அன்போடினி தாகஅழ காக
நன்றேயுரை செய்தாளுயர் பல்கீசெனும் பெண்ணாள்
குன்றாஎழில் கோதையுரை கேட்டேஅவள் தந்தை
ஒன்றாமனங் கொண்டான்பதில் சொல்லாநிலை நின்றான் (274)

### வேறு சந்தம்

தன தானன தனனா
தன தானன தனனா

''அருள்கூடிய செயலும் அறிவோடுறை மனமும்
இருள்நீங்கிய தெளிவும் இதமேவிய உரையும்
பொருளாகிய இறையை தொழுதேத்திடுங் குணமும்
பெருமாநிதி யெனவே உடையோனுா சருகான் (275)

எனும்பேரினைப் பெற்றும் எனதாருயிர் மகளின்
நினைவேறிய ஆசை தனைத்தீர்த் திடும்வலிமை
தினையாயினு மில்லா நிலையெய் திடலானேன்
வினைதீதுள சுறாயிக் கெனும்பாதகன் செயலால் (276)

இதையென்மக ளிடத்தி லெடுத்தெவ்வித முரைப்பேன்?
மதிமிக்கவ ளன்னாள் மறைத்தோதுதல் தீதாம்
எதுநேரினுஞ் சரியே செயல்தீதுள மன்னன்
பதியேகுதல் ஆகா தெனுமுண்மையு ரைப்போம்'' (277)

எனயெண்ணினன் துணிவை வரப்பண்ணினன் இறையை
மனதுள்ளினன் அறிவைப் பதம்பண்ணினன் வருதல்
வினைநண்ணினன் மகளை விழித்துன்னினன் சொற்கள்
தனைச்சொல்லிடக் குரலைச் சரிபண்ணியு ரைத்தான் (278)

"அழகேந்திய கொடியே அறிவேந்திய மகளே
இழிவேந்திய அரசன் எனையாளுவோ னானான்
பழிதாங்கிய அவனின் செயலால்உனை, அழகார்
பொழிலேந்திய திருநா டழைத்தேகிட மறுத்தேன் (279)

மகளாரென உலகில் பிறந்தாரனை வோரும்
தகுவார்தனக் கெனுங்கீழ் நினைவாகிய மன்னன்,
அகமேவிய கொடிய செயலாலவன் நாட்டில்
புகுவோமென மகளிர் நினையாரிது நிலையாம் (280)

பொறுப்பாயெனை யவநா டிடத்தேயுறை மகளிர்
குறித்தே தையும் வினவா திருப்பாயவர் நிலைமை
விரித்தால்கடல் மலையும் கொதித்தே அழலாகும்
மறுத்தேயுரைக் காதே புகத்தீதவன் நாடு." (281)

எனுநேரிய உரையை விழிநீருகச் சுருக்கி
இனியாகினும் மகள்தன் மனம்மாறிடும் எனுமா
நினைவோடெடுத் துரைத்தான் முறைதேறிய அமைச்சன்
தனைமீறிய பதைப்பில் தணலாகினள் பல்கீஸ் (282)

எழுசீர் சந்த விருத்தம்

தன்னன தன்னன தன்னன தன்னன
தன்னன தாதன னா தன

மன்னவன் தீயினுந் தீயவ னாமெனும்
வார்த்தையைக் கேட்ட வுடன் விழி
தன்னில னலெழ உள்ளம் பதைப்புற
தந்தை தனைநோக் கியீ
தென்ன மதியீ தென்ன நெறியீ
தென்ன பொறுப்பா மோஉயிர்
தன்னைப் பெரிதென எண்ணுவோர் அல்லவோ
தாழ்வைச் சகித்திருப் பர்பொது (283)

மக்களின் வாழ்வைச் சீர்கெடச் செய்திடும்
மன்னனை ஆளவிட் டேஅவன்
பக்கலில் மேலாம் பதவி வகிப்பது
பாதக மாகுமன் றோமிகப்
பக்குவ மாயிதை மன்னனுக் கேயுரை
பன்னித் திருத்தலொன் றுபொது
மக்களைத் தூண்டி வன்முறை யின்றி
மன்னனை நீக்க லொன் றாமிதைத் (284)

தக்க முறையிலே செய்யவி யலாவிடிதல்
தாங்கும் பதவித னை''இதோ
இக்கண மேபிடி'' என்றம் மன்னன்
இடத்தி லெறிந்து விட்டே, ஒரு
துக்கமு மின்றியச் சூழலை விட்டுத்
தூர விலகலொன் றா,மிதை
எக்கண முஞ்செய எண்ணார் பதவி
வகித்தல் பிழையா கும்-தன் (285)

தாரம தல்லா மாதரைத் தன்னருந்
தாயாய் நினையா த,பழி
காரனை மேலவன் என்று மதிப்பது
கற்றோர் செயலா மோபடு
சூரனே யாயினுந் தாரங் கடப்பவன்
துட்ட விலங்கா வான், அவன்
வேரோ டழிந்திட வேண்டுவ செய்தலே
வீர மறச்செய லாம்மனம் (286)

ஒவ்வா நிலையிலே* அஞ்சியோ ஆசைக்கோ
உட்படும் பெண்களு மே, உயர்
செவ்வியும் மானமும் வெட்கமு மேயிலா
மிருக இனத்தவராம் இதைப்
பவ்விய மாகப் பகர்ந்தே மக்களை
பாங்குற வாழச் செய்வோர்செயல்
நவ்விய தாகும் நாயகன் நல்லருள்
நாளும் அவருக்குண்டாம் எனச் (287)

செப்பினள் தீயவை செய்பவன் தன்னிலும்
தீயதைப் பார்த்திருத் தல்மிகத்
தப்பித மாகுமத் தப்பிதம் தன்னையென்
தந்தையே செய்குவ தோஇதை
ஒப்பில தென்மனம் ஒப்பிலேன் இங்கினி
ஓர்கணம் நானிருக் கஇதோ
இப்பொழு தேசபா நாட்டிற் கேகநான்
எழுந்தனன் என்றா ளவள். (288)

---

* திருமணப் பிணைப்பு.

### அறுசீர்ச்சந்தவிருத்தம்

''மாவழ குடைய பல்கீ சென்னும்
மகளுரை தனைக்கேட்ட
ஓவிய மொத்த யூசரு கென்னும்
உத்தமன் மனத்தினிலே
ஆவிநி கர்த்த தன்மகள் கூற்றுநல்
அமைச்சனின் கடமையழ்த
மேவியக் கடமையைச் செய்யா திருந்தது
மிகப் பெரும் தவறன்றோ'' (289)

என்ற சிரெண்ணம் எழுந்த தடங்குமுன்
எழிலார் பல்கீசு
நன்றே இருகர மிணைத்து வொலியெழ
நயப்புறத் தட்டினளே
ஒன்றி எழுந்த வொலிகேட் டொருபணிப்
பெண்ணோ டோடிவந்தாள்
''இன்றே நான்சபா நாட்டிற் கேகிட
ஏற்றதைச் செய்யும்படி (290)

சென்றென் பாட்ட னிடம்நீ செப்பெனச்''
செப்பினள் பல்கீசு
நன்றெனப் பணிந்து நடந்தாள் பணிப்பெண்
நல்லனாம் யூசருகான்
ஒன்றுகேள் மகளே நானங் குறைவதோர்
ஒலைவேய் சிறுகுடிசை
நன்குற அரண்மனை தன்னிற் பிறந்த
நாள்முதல் வாழ்ந்துவரும் (291)

நீவந் தங்கே தங்குவ தியலா
நிலையா மெனவுரைத்தான்
''சாவ தாயினும் சரிநான் வருவேன்
தடுக்கா தீரெ''ன்றே
மேவு மெழிலார் பல்கீ சுரைக்க
விதிர்விதிர்ப் புற்றனனே
யாவரும் போற்று மறிவார் சுறாயிக்
கெனுநல் லமைச்சனுமே (292)

அந்தஅவ் வேளையில் பல்கீ சுடைய
அறையினுள் ஜின்வேந்தன்
வந்தான் பாட்டனைக் கண்டு மகிழ்ந்த
மதிமிகு பல்கீசு
தந்தை யுடனே தான்சபா நாடு
தனக்கேகிடும் விருப்பைத்
தந்தாள் சொல்லால் யூசரு குடைய
தன்மை தனையறிந்த (293)

பல்கீ சுடைய பாட்டன் சொன்னான்
பாங்குற என்னரசை
செல்ல மகளின் மகளே நீபொறுப்
பேற்று நடத்துவதற்(கு)
உள்ளவ ளன்றோ? ஏகுதல் சரியோ?
ஏனிந்த முடிவெடுத்தாய்?
சொல்லெனக் கேட்டான்; சொன்னாள் சுறாயிச்
செய்திடும் கொடுமைதன்னை (294)

பெண்கள் தனக்குச் சுறாயிச் கியற்றும்
கொடுமையைப் போக்குதற்கு
பெண்ணா கியநீ ஏகுதல் வேண்டாம்
பொறுப்பினை நானேற்பேன்
மண்ணி லினியவன் இருந்திடா நிலையை
வகையுற நான்செய்வேன்
திண்ண மிதுவெனச் செப்பினான் ஜின்னர
சன்பல் கீசினிடம் (295)

பெண்களின் கற்பை அழித்திடும் அவனைப்
பெண்ணா கியநானே
விண்ணுல கேகிட வைப்ப தேசரி
விடைதர வேண்டுமென
கண்களில் கனற்பொறி தெறிப்ப வுரைத்தாள்
காரிகை பல்கீசு
அன்னவன் முடிவை மாற்றுவ தாகா
தென்பதைத் தெரிந்திருந்தும் (296)

ஜின்களின் வேந்தன் செப்பினான் முடிவைச்
சிறிதுநாள் மாற்றிவைத்தால்
ஜின்களை அனுப்பி ஆங்கோர் மாளிகை
சிறப்பாய் அமைத்திடுவேன்
அன்னஅம் மாளிகை தன்னைக் காண்பேபார்
அதிசயித் தேநிற்பார்
உன்னரும் சேடியரி தோழியர் போர்வலி
வீரக் காவலர்கள் (297)

யாவரும் நீசெலும் முன்னம் சென்றிடச்
செய்வே னதன்பின்னர்
யாவும் செம்மை யாக அமைந்திடும்
அனுப்புவே னுனைஅங்கே
மூவா மருந்தினும் மேலாய்ப் பிறந்துள
மகளின் திருமகளே
நோவா மனத்துடன் ஏற்பாய் என்றனின்
விருப்பினை எனப்பகர்ந்தான் (298)

பாட்டன் விருப்பை ஏற்றனள் பல்கீ
செனுமுயரிப் பெண்கொடிதான்!
ஈட்டம தாக ஜின்களை சுறாயிக்
கிருந்திடும் நாடுசெல
ஓட்டினன் பல்கீ சேகியங் கிருப்பதற்
கேற்றமா ளிகையமைக்க!
காட்டையும் தன்னரும் நாட்டையும் கடந்தே
கடுகியே கினஜின்கள்! (299)

எழுந்தது மாளிகை சபாநக ரின்புற
இடத்தில் அழகுறவே
நலந்திகழ் மாளிகை அமைந்த தறிந்த
நயத்தகு பல்கீசு
பலங்கெழு பாதுகாப் புடன்சென் றடைந்தாள்
பணிப்பெண் கள்தொடர
கலங்கிய மனத்துடன் யூசரு கானவன்
கணமும் சுறாயிக்கிதை (300)

''அறிந்தா லென்ன வாகுமோ'' எனநினைந்
    தஞ்சி நடுங்கினனே!
குறியெலாம் பெண்கள் மேலுள சுறாயிக்
    கூட்டா ளியர்விரைவில்
அறிந்தார் நிலவும் நாணிடும் அழகுறும்
    அதிசய இளநங்கை
புறநகர்ப் பகுதியில் மாளிகை அமைத்ததில்
    போந்துறை கின்றாளென (301)

செவியுறச் சுறாயிக் கின்பால் தோழர்
    செப்பினர் சென்றங்கதை
உவமை யில்லா அழகி யொருத்தி
    ஊரின் புறத்தினிலே
நவமிகு மாளிகை அமைத்ததில் குடிவந்
    திருப்ப தறிந்ததுமே
புவியே யதிர்ந்திடக் குதித்தான் எழுந்தான்
    கொணர்களன் குதிரைஎன்றான். (302)

அடுத்த பாகத்தில் காவியம் தொடரும்

## கவி கா. மு. ஷெரீப் அவர்களின் நூல்கள்!

சீறாப்புராணம் - நுபுவ்வத்துக் காண்டம்
மூலமும் உரையும்
உரை ஆசிரியர் : கவி கா. மு. ஷெரீப்

| | | |
|---|---|---|
| முதற் பாகம் (இரண்டாம் பதிப்பு) | ரூ. | 40 00 |
| இரண்டாம் பாகம் (இரண்டாம் பதிப்பு) | ரூ. | 30 00 |
| மூன்றாம் பாகம் (மூன்றாம் பதிப்பு) | ரூ. | 40 00 |
| நான்காம் பாகம் (இரண்டாம் பதிப்பு) | ரூ. | 35 00 |

ஷை ஹிஜ்ரத்துக் காண்டம் மூலமும் உரையும்

| | | |
|---|---|---|
| முதற் பாகம் | ரூ. | 45 00 |
| இரண்டாம் பாகம் (அச்சில்) | ரூ. | 35 00 |
| மூன்றாம் பாகம் (அச்சில்) | ரூ. | 40 00 |
| நான்காம் பாகம் | ரூ. | 45 00 |
| ஐந்தாம் பாகம் | ரூ. | 32 00 |
| சீறாப்புராண சொற்பொழிவு | ரூ. | 20 00 |
| நபியே, எங்கள் நாயகமே! (சதக முறைக் காவியம்) | ரூ. | 15 00 |
| ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ் | ரூ. | 15 00 |
| நீங்களும் பாடலாம் இஸ்லாமிய இசைப் பாடல்கள் | ரூ. | 5 00 |
| ஆன்ம கீதம் (அந்தாதி) | ரூ. | 4 00 |
| இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா? | ரூ. | 7 00 |
| வள்ளல் சீதக்காதி வரலாறு | ரூ. | 17 00 |
| இஸ்லாமும் ஜீவகாருண்யமும் (அச்சில்) | ரூ. | 7 00 |
| கிழக்கிலுள்ள பிறைக் கொடி நாடு | ரூ. | 20 00 |
| பொது சிவில் சட்டம் பொருந்துமா? | ரூ. | 7 50 |
| இறைவனுக்காக வாழ்வது எப்படி? (அச்சில்) | ரூ. | 5 00 |
| இறையருள் வேட்டல் | ரூ. | 3 00 |
| பத்ருப் போர் பின் விளைவுகள் | ரூ. | 7 00 |
| கவி கா. மு. ஷெரீப் கவிதைகள் | ரூ. | 45 00 |
| களப்பாட்டு | ரூ. | 6 00 |
| புலவர் புகழேந்தி (இலக்கிய நாடகம்) | ரூ. | 13 00 |
| கண்ணகியின் கனவு (இலக்கியக் கட்டுரைகள்) | ரூ. | 5 00 |
| மச்ச கந்தி (பீஷ்ம சபதம்) குறுங்காவியம் | ரூ. | 8 00 |
| Machchaganti (Bhishmasapatham) English Rendering with Tamil Original | Rs. | 16 00 |
| வீரன் செண்பகராமன் வரலாறு | ரூ. | 7 00 |
| விபீஷணன் வெளியேற்றம் | ரூ. | 6 00 |

வி. பி. கிடையாது. முன் பணம் அனுப்புவோர்க்கு தபால் செலவின்றி நூல்கள் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு தக்க கழிவுண்டு.

விபரங்கட்கு :

### சீதக்காதி நூல் வெளியீட்டகம்

21, பச்சையப்பச் செட்டித் தெரு,
எல்லிஸ் சாலை, சென்னை-600 002.